முன்னுரை

கொலோசெ பட்டணம் பிரிகியா மாகாணத்திலுள்ளது. இது லவோதிக்கேயா, எராப்போலி ஆகிய பட்டணங்களுக்கு அருகாமையிலுள்ளது. இவ்விரண்டு பட்டணங்களும் கொலோ 4:13-ஆவது வசனத்தில் சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது இந்தப் பட்டணங்களெல்லாம் அழிந்து தரைமட்டமாயிற்று. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், பூமியில் புதைந்திருக்கிற இந்தப் பட்டணத்தை ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்தப் பட்டணத்தைப்பற்றிய செய்திகள், பசுமையான நினைவுகள் ஆகியவையெல்லாம் அப்போஸ்தலர் பவுல் கொலேசெயருக்கு எழுதின நிருபத்தில் பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கொலோசெ பட்டணத்தார் மத்தியில் யூதமார்க்கத்தைச் சேர்ந்த கள்ளப்போதகர்கள் சத்தியத்தைப் புரட்டுகிறார்கள். இவர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கிறிஸ்துவின் கிருபையை மறுதலிக்கிறார்கள். இவர்களைக் குறித்து கொலோசெயர்கள் எச்சரிப்போடிருக்கவேண்டும் என்னும் நோக்கத்தோடு பவுல் இந்த நிருபத்தை அவர்களுக்கு எழுதுகிறார்.

கொலோசெயர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய்த் தரித்திருக்கிறார்கள். பவுல் இந்த நிருபத்தை எழுதும்போது அவர் ரோமாபுரியிலுள்ள சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். அவருடைய சரீரம்தான் கட்டப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையை சிறைச்சாலையால் கட்டி வைக்க முடியவில்லை. பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருந்தாலும் அங்கு அவர் சும்மாயிருக்கவில்லை. விசுவாசிகளுக்கு நிருபங்களை எழுதி கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து செய்கிறார்.

பவுல் இதுவரையிலும் கொலேசெ பட்டணத்திற்குப் போனதில்லை. கொலேசெ சபையிலுள்ள விசுவாசிகளை பவுல் இன்னும் பார்த்ததில்லை. ஆனாலும் பவுல் அவர்களுக்கு நிருபம் எழுதுகிறார். இந்த நிருபத்தைப்போலவே, பவுல் ரோமாபுரியாரைப் பார்க்காமலேயே, அவர்களுக்கும் நிருபம் எழுதியிருக்கிறார்.

கொலேசெ பட்டணத்தில் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பவுலுடைய ஊழியத்தின் மூலமாய் இந்தச் சபை ஸ்தாபிக்கப்படவில்லை. எப்பாப்பிராவினுடைய ஊழியத்தின் மூலமாய் இங்கு சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது (கொலோ 1:7). புறஜாதியார் மத்தியில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்குமாறு பவுல் எப்பாப்பிராவை அனுப்பியிருந்தார்.

கொலேசெ பட்டணத்திலுள்ள சபை வளர்ச்சி பெற்றிருக்கிறது. அக்காலத்திலிருந்த மற்ற சபைகளைவிட கொலோசெ சபை விசுவாசிகளுடைய எண்ணிக்கையில் அதிகரித்திருந்தது. பவுலைப்போல எப்பாப்பிரா பிரசித்திப் பெற்ற ஊழியரல்ல. சாதாரண ஊழியர்தான். அதிகமாக விளம்பரமில்லாதவர். என்றாலும் சாதாரண ஊழியக்காரராகிய எப்பாப்பிராவைக் கொண்டு, ஒரு பெரிய சபையை ஸ்தாபித்தது கர்த்தருக்குச் சித்தமாயிற்று. கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரம் தம்முடைய ஊழியக்காரர்களைப் பயன்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபையையும், கிரியையையும் நம்மால் ஆளுகை செய்யமுடியாது. அவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமும், விருப்பத்தின் பிரகாரமும் கிரியை நடப்பிக்கிறார்.

கொலேசெ பட்டணத்திலுள்ள சபையை பவுல் ஸ்தாபிக்கவில்லை. இது எப்பாப்பிரா ஸ்தாபித்த சபை. அதற்காக பவுல் அந்தச் சபையாரைப் புறக்கணித்துவிடவில்லை. அந்தச் சபையை பவுல் ஸ்தாபிக்காவிட்டாலும், அந்தச் சபையார்மீது பவுல் மிகுந்த அன்போடிருக்கிறார். பிலிப்பியரைப் போலவே, கொலோசெயரும் பவுல்மீது அன்பாயிருக்கிறார்கள். பவுல் பல இடங்களில் ஊழியம் செய்திருக்கிறார். சபைகளை ஸ்தாபித்திருக்கிறார். அங்குள்ள விசுவாசிகளெல்லாம் பவுல்மீது பிரியமாயிருக்கிறார்கள். அவர்களைப்போலவே கொலோசெயரும் பவுல்மீது பிரியமாயிருக்கிறார்கள்.

1 அதிகாரம்

கொலோசெயருக்கு அப்போஸ்தலர் பவுல் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக என்று சொல்லி வாழ்த்துகிறார் (கொலோ 1:1,2). கொலோசெயரின் விசுவாசத்திற்காகவும், அன்புக்காகவும், நம்பிக்கைகாகவும் பவுல் தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லுகிறார் (கொலோ 1:3-8). அவர்களுடைய அறிவுக்காகவும், பெலனுக்காகவும், அவர்கள் கனிகொடுக்கவேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார் (கொலோ 1:9-11). பரிசுத்த ஆவியானவரின் கிரியையையும் மீட்பருடைய இரட்சிப்பின் கிரியையையும், பவுல் எடுத்துச்சொல்லி, சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதை விளக்குகிறார் (கொலோ 1:12-29).

கிருபையும் சமாதானமும் உண்டாவதாக கொலோ 1 : 1,2

கொலோ 1:1. தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும்,

கொலோ 1:2. கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமா யிருக்கிற சகோதரர்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தில் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, "தேவனுடைய சித்தத்தினாலே இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல்" என்று சொல்லுகிறார். பவுலுக்கு தன்னுடைய அப்போஸ்தல ஊழியம் மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. இந்த ஊழியத்தை அவர் ஒரு மேன்மையான ஊழியமாக நினைக்கிறார். ஏனெனில் தேவனுடைய சித்தத்தினாலே பவுல் அப்போஸ்தலராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

தேவன் தம்முடைய சித்தத்தினால் தன்னை அப்போஸ்தலராக நியமித்திருக்கிறார் என்று சொல்லும்போது, அவர் தன்னோடுகூட தீமோத்தேயுவையும் சேர்த்துக்கொள்கிறார். மற்ற நிருபங்களிலெல்லாம் பவுல் தீமோத்தேயுவை, "தன்னுடைய குமாரன்" என்று சொல்லுவது பவுலின் வழக்கம். ஆனால் இந்த நிருபத்திலோ அவரை, "சகோதரனாகிய தீமோத்தேயு" என்று குறிப்பிடுகிறார்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளைப்பற்றிச் சொல்லும்போது, அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தவான்களும் விசுவாசிகளுமா யிருக்கிற சகோதரர்கள்" என்று சொல்லுகிறார். நல்ல விசுவாசிகள் ஒருவருக்கொருவர் சகோதரராயிருப்பார்கள். தேவனுடைய சமுகத்திற்கு முன்பாக விசுவாசிகள் பரிசுத்தவான்களாயிருக்கவேண்டும். நாம் மற்ற விசுவாசிகளுக்கு சகோதரராகவும், தேவனுக்கு முன்பாக பரிசுத்தவான்களாகவும் இருக்கும்போது, நாம் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். விசுவாசிகளாகவும் இருக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் விசுவாசம் வெளிப்பட வேண்டும். நம்முடைய சுபாவத்தில் விசுவாசம் காணப்படவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு விசுவாசமே நமக்கு மகிமையாகவும் கிரீடமாகவும் இருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளை வாழ்த்தும்போது, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" என்று சொல்லி வாழ்த்துகிறார். கிருபையும் சமாதானமும் தேவனிடத்திலிருந்து நமக்கு இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. தேவனுடைய கிருபையும் சமாதானமும் நமக்குக் கிடைக்கும்போது, ஆவிக்குரிய மற்ற ஆசீர்வாதங்களெல்லாம் நமக்குகூடக் கிடைக்கும்.

ஸ்தோத்திரம் செய்கிறோம் கொலோ 1 : 3-8

கொலோ 1:3. கிறிஸ்து இயேசுவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தையும், பரிசுத்தவான்களெல்லார் மேலுமுள்ள உங்கள் அன்பையுங் குறித்து நாங்கள் கேள்விப்பட்டு,

கொலோ 1:4. பரலோகத்தில் உங்களுக்காக வைத்திருக்கிற நம்பிக்கையினிமித்தம்,

கொலோ 1:5. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம்.

கொலோ 1:6. அந்த நம்பிக்கையைக் குறித்து, நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக்கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன்தருகிறதாயிருக்கிறது;

கொலோ 1:7. அதை எங்களுக்குப் பிரியமான உடன் வேலையாளும், உங்களுக்காகக் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிராவினிடத்தில் நீங்கள் கற்றறிந்திருக்கிறீர்கள்;

கொலோ 1:8. ஆவிக்குள்ளான உங்கள் அன்பையும் அவனே எங்களுக்குத் தெரியப்படுத்தினான்.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். பவுல் அவர்களுக்காக ஜெபிக்கும்போது, தேவனுடைய சமுகத்தில் அவர்களுக்காக ஸ்தோத்திரம்பண்ணுகிறார். நம்முடைய ஜெபத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஸ்தோத்திரம்பண்ணுவது முக்கிய பங்கு வகிக்கவேண்டும். பவுல் "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு" ஸ்தோத்திரம் செலுத்துகிறார். நம்முடைய ஜெபத்தில் நாம் ஸ்தோத்திரங்களை ஏறெடுக்கும்போது, தேவனை தேவனாகவும், அதே சமயத்தில் அவரை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகவும் நோக்கிப் பார்க்கவேண்டும். ஏனென்றால் நன்மையான எல்லா ஈவுகளும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே நமக்கு வருகிறது.

கொலேசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளிடத்தில் தேவனுடைய கிருபை நிரம்பியிருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். பரிசுத்தவான்கள் எல்லார்மேலும் அன்புகூருகிறார்கள். இவையெல்லாவற்றையும் பவுல் கேள்விப்படுகிறார். இதனிமித்தமாக அவர்களுக்கு பரலோகத்தில் நம்பிக்கை உண்டாயிருக்கிறது. இதற்காக பவுல் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஆகிய மூன்றும் தேவனுடைய முக்கியமான கிருபைகளாகும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு இவை மூன்றும் தேவை. கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளிடத்தில் இம்மூன்று கிருபைகளும் நிரம்பியிருக்கிறது. அவர்கள் இயேசுகிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் வைத்திருக்கிறார்கள். கிறிஸ்துவில் விசுவாசம் வைக்குமாறு அவர்களுக்கு உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் விசுவாசத்தில் வழிநடத்தப்பட்டிருக்கிறார்கள். இதற்காக பவுல் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகள் அன்புள்ளவர்களாக இருக்கிறார்கள். எல்லா மனுஷர்மீதும் அன்புகூருகிறார்கள். அதிலும் விசேஷமாக பரிசுத்தவான்கள் எல்லார்மேலும் அன்புகூருகிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் எல்லா பரிசுத்தவான்கள்மேலும் அன்புகூர வேண்டும். பரிசுத்தவான்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம். ஒரு சில பலவீனங்கள் இருக்கலாம். இவையெல்லாவற்றையும் பெரிதுபடுத்தக் கூடாது. கர்த்தருடைய பரிசுத்தவான்களை, பரிசுத்தவான்களாகவே நோக்கிப் பார்க்கவேண்டும். அவர்கள் எல்லோர்மீதும் அன்புகூரவேண்டும்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்காக பரலோகத்தில் நம்பிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. உலகப்பிரகாரமான ஜனங்கள் இப்பிரபஞ்சத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமோ பரலோகத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். கர்த்தர் நமக்காக பரலோகத்தில் ஏராளமான ஆசீர்வாதங்களை வைத்திருக்கிறார். நம்முடைய நம்பிக்கை பரலோகத்தின்மீது இருக்கவேண்டும். இப்பிரபஞ்சத்தில் நாம் கிறிஸ்துவுக்காக பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்க வேண்டியது வரலாம். இப்படிப்பட்ட கஷ்டமான சூழ்நிலைகளில் நாம் பரலோகத்தையே நோக்கிப் பார்க்கவேண்டும். அங்கு நமக்கு வெகுமதி வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பூமியில் நாம் பொக்கிஷத்தைச் சேர்த்து வைக்கக்கூடாது. நம்முடைய பொக்கிஷம் பரலோகத்தில் சேர்த்து வைக்கப்படவேண்டும். நம்முடைய நம்பிக்கை பூமியின்மீது இருக்கக்கூடாது. நாம் பரலோகத்தின்மீது நம்பிக்கை வைக்கவேண்டும்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகள் தேவனுடைய கிருபையைப் பெற்றிருக்கிறார்கள். பரலோகத்தைக் குறித்து நம்பிக்கையாயிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையைக் குறித்து, அவர்கள் முன்னமே, சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டார்கள். சுவிசேஷம் சத்திய வசனமாக இருக்கிறது. சத்திய வசனத்தின்மீது நம்முடைய ஆத்துமாவை பாதுகாப்பாக வைத்திருக்கலாம்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகள் தேவகிருபையை சத்தியத்தின்படி அறிந்துகொண்டார்கள். சத்திய வசனத்தை கேட்பதும், அதை அறிந்துகொள்வதும் நமக்கு மிகப்பெரிய ஆசீர்வாதம். இதனால் தேவகிருபையும், இரக்கமும் நமக்குக் கிடைக்கும். கிறிஸ்துவின் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பி பலன் தருகிறது. சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கிறிஸ்துவுக்குள் நாம் நம்பிக்கை வைக்கும்போது, அது நமக்கும் பலன் தரும்.

சத்திய வசனமாகிய சுவிசேஷத்தை யாரெல்லாம் கேட்கிறார்களோ அவர்கள் எல்லோரும் சுவிசேஷத்தின் கனிதர வேண்டும். எங்கெல்லாம் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் தேவனுக்கு கனமும் மகிமையும் உண்டாகும். இதுவே சுவிசேஷத்தின் கனி. சுவிசேஷம் நமக்கு மாத்திரம்தான் உரியது என்று யாரும் சொந்தம் கொண்டாடமுடியாது. சுவிசேஷம் முழுஉலகத்திற்கும் பொதுவானது. அது உலகமெங்கும் பரம்பி பலன் தரும். சுவிசேஷத்தின் ஆசீர்வாதங்களும், ஆறுதல்களும் நமக்கு மாத்திரம்தான் சொந்தமானவை என்று நாம் நினைக்கக் கூடாது. அது உலகமுழுவதிலுமுள்ள எல்லா ஜனங்களும் பொதுவானது. சத்திய வசனமாகிய சுவிசேஷத்தை கேள்விப்படுகிறவர்கள் எல்லோருக்கும் தேவன் தம்முடைய கிருபையை வெளிப்படுத்துவார்.

கொலோசெ பட்டணத்திலுள்ள ஜனங்கள் மத்தியிலே எப்பாப்பிரா சுவிசேஷத்தை அறிவித்தார். அவர்கள் மத்தியில் இவர் கர்த்தருடைய ஊழியத்தை உண்மையாய்ச் செய்தார். அப்போஸ்தலர் பவுல் இவரைப்பற்றிச் சொல்லும்போது, "எங்களுக்குப் பிரியமான உடன்வேலையாளும், உங்களுக்காக கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிரா" என்று குறிப்பிடுகிறார் (கொலோ 1:7).

எப்பாப்பிரா அப்போஸ்தலர் பவுலுக்கு உடன் வேலையாளாயிருக்கிறார். கர்த்தருடைய ஊழியத்தில் எல்லா ஊழியக்காரர்களும் உடன் வேலையாட்களாக இருக்கிறார்கள். பவுல் எப்பாப்பிராவைப்பற்றிச் சொல்லும்போது அவர் தனக்கு "பிரியமான உடன்வேலையாள்" என்று குறிப்பிடுகிறார். பவுலும் எப்பாப்பிராவும் ஒரே மாதிரியான ஊழியத்தையே செய்கிறார்கள். ஒரே கர்த்தருக்கு ஊழியம் செய்கிறார்கள். ஒரே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள். எப்பாப்பிரா கொலோசெ ஜனங்கள் மத்தியில் கிறிஸ்துவுக்கு உண்மையான ஊழியக்காரராயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல், எப்பாப்பிராவைப்பற்றிச் சொல்லும்போது, "எப்பாப்பிரா உங்கள் ஊழியக்காரர்" என்று பொதுவாகச் சொல்லவில்லை. அதற்குப் பதிலாக "உங்களுக்காக கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரனுமாயிருக்கிற எப்பாப்பிரா" என்றே குறிப்பிடுகிறார். தேவனுடைய அதிகாரத்தினாலும், அவருடைய நியமனத்தினாலும், எப்பாப்பிரா கொலோசெ பட்டணத்திலுள்ள மக்களுக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறார். இவர் கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரர். கிறிஸ்துவானவரே இவரை கொலோசெ பட்டணத்திலுள்ள ஜனங்கள் மத்தியில் தமக்கு உண்மையான ஊழியக்காரனாயிருக்கும்படி நியமித்திருக்கிறார்.

எப்பாப்பிரா கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளின் நற்செய்திகளை பவுலுக்கு அவ்வப்போது எடுத்துச்சொல்வார். ஆவிக்குள்ளான அவர்களுடைய அன்பை எப்பாப்பிராவே பவுலுக்குத் தெரியப்படுத்தினார் (கொலோ 1:8). கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகள் பவுலிடத்தில் உண்மையாய் அன்புகூருகிறார்கள். அவர்களுடைய அன்பு மாம்சப்பிரகாரமானதல்ல. அது உலகப்பிரகாரமான அன்பல்ல. அது ஆவிக்குள்ளான அன்பு. நாம் கர்த்தரிடத்தில் உண்மையாய் அன்புகூரும்போது, நமக்குள் ஆவிக்குள்ளான அன்பு பெருகும். மற்ற பரிசுத்தவான்களிடத்தில் நாம் ஆவிக்குள்ளான அன்பை வெளிப்படுத்துவோம். உண்மையுள்ள ஊழியக்காரர்கள் விசுவாசிகளைப்பற்றி நற்செய்தியை அறிவிப்பார்கள். விசுவாசிகளின் நல்ல காரியங்களை மற்றவர்களுக்குச் சாட்சியாகச் சொல்லுவது ஊழியக்காரருக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தரும்.

ஜெபம்பண்ணுகிறோம்
கொலோ 1 : 9-11

கொலோ 1:9. இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம் பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,

கொலோ 1:10. சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்,

கொலோ 1:11. சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடிய சாந்தமும் உண்டாவதற்கு மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல்செய்கிறோம்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளின் நற்செய்தியை பவுல் கேள்விப்படுகிறார். அவர்களுடைய ஆவிக்குள்ளான அன்பைக் குறித்தும் கேள்விப்படுகிறார். பவுல் அதைக் கேட்ட நாள்முதல், அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறார். அவர்கள் இன்னும் நன்றாயிருக்க வேண்டுமென்றும், எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவர்கள் இருக்கவேண்டுமென்று அவர்களுக்காக ஜெபம்பண்ணுகிறார்.

அப்போஸ்தலர் பவுலும், அவருடைய உடன்ஊழியரும் கொலோசெயருக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறார்கள். கொலேசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளைப்பற்றிய செய்தி பவுலுக்கு அவ்வப்போதுதான் தெரிவிக்கப்படும். எப்போதாவது அவர்களைப்பற்றிய நற்செய்தியை பவுல் கேள்விப்படுவார். ஆனால் பவுலோ அவர்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறார்.

கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும், அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும் வேண்டுமென்று பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறார். ஒவ்வொரு விசுவாசியின் ஜீவியத்திலும் ஞானம், விவேகம், கிறிஸ்துவின் சித்தத்தை அறிகிற அறிவு ஆகிய மூன்றும் நிரம்பியிருக்கவேண்டும். விவேகமும் ஞானமும் இல்லாமல் தேவனுடைய சித்தத்தை அறியமுடியாது. சத்தியத்தை அறியவேண்டுமென்றால் நமக்கு தெய்வீக ஞானமும், ஆவிக்குரிய விவேகமும் தேவை. கர்த்தரே தம்முடைய பிள்ளைகளுக்கு இவற்றை ஆசீர்வாதமாகத் தருகிறார். தேவனிடமிருந்து இந்த கிருபைகளைப் பெற்றுக்கொள்ளும்போது, கர்த்தருடைய சித்தத்தை அறிகிற அறிவு நமக்குள் நிரம்பியிருக்கும்.

தேவனுடைய தெய்வீக சத்தியத்தை அறிந்ததுபோல நடிக்கக்கூடாது. புரிந்ததுபோல மாய்மாலம்பண்ணக்கூடாது. நம்மிடத்தில் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவு இருக்கும்போது, அது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருக்கும். தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய சித்தத்தை அறிந்துகொண்டவர்கள் மாத்திரமே அவருடைய சித்தத்தின்படி கிரியை செய்வார்கள். தேவசித்தத்தை அறியாமல், நம்மால் அவருடைய சித்தத்தின்படி நடக்க முடியாது.

தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவு நமக்கு ஆசீர்வாதமாகக் கொடுக்கப்படுகிறது. இந்த அறிவை நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் எப்படி பயன்படுத்தவேண்டும் என்னும் ஞானத்தையும், ஆவிக்குரிய விவேகத்தையும் கர்த்தரே நமக்கு ஈவாகக் கொடுக்கிறார். நாம் சந்திக்கிற ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுடைய சித்தத்திற்கு எப்படி கீழ்ப்படியவேண்டும் என்பதை தேவனே தம்முடைய ஞானத்தினாலும் விவேகத்தினாலும் நமக்குக் கற்றுக்கொடுக்கிறார். நம்மிடத்தில் தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவு நிரம்பியிருக்கவேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தை சாதாரணமாகத் தெரிந்துகொண்டால் மாத்திரம் போதாது. அதை இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நாம் நிரப்பப்படவேண்டும் (கொலோ 1:9).

நமக்கு தேவனுடைய சித்தத்தை அறிகிற அறிவு இருந்தால்மாத்திரம் போதாது. நம்முடைய ஜீவியமும் நன்றாயிருக்கவேண்டும். நற்கிரியைகளைச் செய்யவேண்டும். எது நல்லது என்பதை நாம் தெரிந்துவைத்திருந்தால் மாத்திரம் போதாது. நம்முடைய ஜீவியத்தில் நல்லது செய்யவேண்டும். சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவிலே விருத்தியடையவேண்டும். கர்த்தருக்குப் பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவேண்டும் (கொலோ 1:10).

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் நிறைவேற்றுகிற நற்கிரியைகள் தேவனுக்குப் பிரியமாயிருக்கும். நாம் சகலவித நற்கிரியைகளுமாகிய நற்கனிகளைத் தரவேண்டுமென்று தேவன் விரும்புகிறார். நாம் நற்கிரியைகளைச் செய்யும்போது தேவனுக்கு நம்மீது பிரியமுண்டாகும். மனுஷருக்குப் பிரயோஜனமுண்டாகும். நாம் நல்ல வார்த்தைகளை மாத்திரம் பேசுவதினால் பிரயோஜனமில்லை. நாம் நற்கிரியைகளையும் செய்யவேண்டும். நற்கிரியைகளில்லாத நல்வார்த்தைகள் பிரயோஜனமற்றவை. நம்மிடத்தில் நற்கிரியைகள் நிரம்பியிருக்கவேண்டும். நாம் சகலவிதமான நற்கிரியைகளையும் செய்யவேண்டும்.

தேவனை அறிகிற அறிவில் நாம் விருத்தியடையவேண்டும். இந்த அறிவு விருத்தியடைய விருத்தியடைய, நாம் சகலவிதமான நற்கிரியைகளையும் அதிகமாய்ச் செய்யவேண்டும். நாம் எந்த அளவுக்கு நற்கிரியைகளை அதிகமாய்ச் செய்கிறோமோ அந்த அளவுக்கு நாம் தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைவோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய வல்லமையின்படி எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நாம் எந்த நிலமையிலிருந்தாலும், நமக்கு இன்னும் ஆவிக்குரிய பலன் தேவையாயிருக்கிறது. ஒவ்வொரு நற்கிரியையையும் செய்வதற்கு தேவஆவியானவர், தேவகிருபையினால் நம்மைப் பலப்படுத்தவேண்டும். எல்லா தீங்குகளுக்கும் நம்மை விலக்கிக் காத்துக்கொள்ள வேண்டும். ஆவியானவரே தம்முடைய கிருபையினால் நமக்கு அரணாகயிருந்து பிசாசின் எல்லா தந்திரங்களுக்கும் எதிராக நம்மை பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

நாம் ஆவிக்குரிய பலத்திற்காக ஜெபிக்கும்போது, தேவனுடைய கிருபையையும் அவருடைய வாக்குத்தத்தத்தையும் மறந்துவிடக்கூடாது. தேவனுடைய கிருபையினாலேயே நமக்கு வல்லமை கிடைக்கும். தேவனுடைய வல்லமையால் நாம் பெலப்படுத்தப்படும்போது, நம்முடைய விசுவாசத்திலும் நாம் பலப்படவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளுக்காக ஜெபம்பண்ணுகிறார். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் சந்தோஷத்தோடே கூடிய எல்லா பொறுமையும், நீடிய சாந்தமும் உண்டாகவேண்டும் என்று ஜெபிக்கிறார். மகிமையான தேவனுடைய வல்லமையின்படி அவர்கள் எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்பட வேண்டுமென்று அவர்களுக்காக வேண்டுதல் செய்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெயம்பெறுவதற்கு தேவனுடைய எல்லா வல்லமையும் நமக்குத் தேவைப்படுகிறது. தேவனுடைய வல்லமை மகிமையானது. அந்த மகிமையான வல்லமையினாலே நாம் பலப்படுத்தப்படவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு சோதனைகள் வரலாம், வேதனைகளும் வரலாம். சோதனைகளையும் வேதனைகளையும் தாங்குவதற்கு நமக்குப் பெலன் தேவை. சில சமயங்களில் நம்முடைய அறியாமையினால் நாம் தப்பிதம் செய்துவிடலாம். நாம் பாவத்தில் விழுந்துவிடாதவாறு நம்மைப் பாதுகாப்பதற்கு தேவனுடைய கிருபை நமக்குத் தேவை. ஆகையினால்தான் அப்போஸ்தலர் பவுல் தேவனுடைய மகிமையான வல்லமையின்படி நாம் எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்று ஜெபம்பண்ணுகிறார்.

விசுவாசிகளின் இருதயத்தில் தேவனுடைய கிருபை நிரம்பியிருக்கவேண்டும். இதுவே தேவனுடைய மகிமையான வல்லமை. இந்த வல்லமையில் தேவனுடைய மகிமை வெளிப்படுகிறது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு உண்டாயிருக்கிற வெற்றிகள் நம்முடைய சுயபலத்தினால் உண்டாவதில்லை. அது தேவனுடைய மகிமையான பெலத்தினாலேயே உண்டாகிறது. நம்முடைய பலவீனத்தின்படி நாம் பலப்படுத்தப் படுவதில்லை. தேவனுடைய மகிமையான வல்லமையின்படியே நாம் பலப்படுத்தப்படுகிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு சந்தோஷத்தோடே கூடிய எல்லா பொறுமையும், நீடிய சாந்தமும் உண்டாகவேண்டும். விசுவாசிகளுக்கு சோதனைகளும் பாடுகளும் வரும்போது அவர்களுக்கு ஆதரவு சொன்னால் மாத்திரம் போதாது. அந்த ஆதரவு அவர்களைப் பெலப்படுத்தாது. சோதனைகளை எதிர்கொள்ளத்தக்கதாக விசுவாசிகளுக்குள் பெலன் இருக்கவேண்டும். தேவனே தம்முடைய மகிமையான வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் நம்மைப் பலப்படுத்தவேண்டும். அவரே நமக்குப் பெலனாகயிருக்கவேண்டும்.

தேவன் நம்மைப் பலப்படுத்தும்போது நமக்கு எல்லா பொறுமையும் உண்டாகும். எல்லா சோதனைகளையும் பொறுமையோடு சகித்துக்கொள்வோம். நமக்குச் சோதனைகள் வரும்போது, சோதனைகளும் தேவனிடமிருந்து வரும் வெகுமதிகள் என்று அவற்றைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வோம். நமக்கு உண்டாகிற சோதனைகளுக்காகக்கூட நாம் கர்த்தருக்கு நன்றிசெலுத்துவோம். நமக்கு ஏற்படும் சோதனையை கர்த்தருடைய சமுகத்தில் ஆராய்ந்து பார்த்து, ஆவிக்குரிய பாடங்களைக் கற்றுக்கொள்வோம். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறுவோம்.

தேவன் நம்மைப் பலப்படுத்தும்போது நமக்கு நீடிய சாந்தமுண்டாகிறது. நமக்கு சோதனைகள் வரும்போது, அதை சிறிதுகாலம் மாத்திரம் தாங்கிக்கொண்டு, அதன்பின்பு சோர்ந்துபோவோம். இது நம்முடைய பொதுவான இயல்பு. ஆனால் தேவன் தம்முடைய வல்லமையினால் நமக்குள் நீடிய சாந்தத்தை உண்டுபண்ணும்போது, நமக்குண்டாகிற சோதனைகளை நீண்டகாலத்திற்குச் சகித்துக்கொள்வோம். தேவன் எவ்வளவு காலத்திற்கு நமக்கு சோதனையை அனுமதிக்கிறாரோ, அவ்வளவு காலத்திற்கும் அந்தச் சோதனையைச் சகித்துக்கொள்வோம். அந்த அளவுக்கு நம்மிடத்தில் நீடிய சாந்தம் உண்டாயிருக்கும்.

தேவன் தம்முடைய மகிமையான வல்லமையினால் நம்மைப் பெலப்படுத்தும்போது, நாம் பாடுகளையும் வேதனைகளையும் சந்தோஷத்தோடே சகித்துக்கொள்வோம். நமக்குண்டாகிற உபத்திரவத்தில் நாம் சந்தோஷப்படுவோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் பாடுகளை அனுபவிப்பதற்கு கர்த்தர் நம்மை பாத்திரவான்களாக நியமித்திருப்பதை நினைத்து நாம் சந்தோஷப்படுவோம்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் நமக்கு போராட்டங்களும், உபத்திரவங்களும் வேதனைகளும் வரும்போது நம்முடைய இருதயத்தில், நீடிய பொறுமையும், நீடிய சாந்தமும், மிகுந்த சந்தோஷமும் நிரம்பியிருக்கும். இவை நம்முடைய சுயபலத்தினால் உண்டாவதில்லை. இது தேவனுடைய மகிமையான வல்லமையினால் உண்டாகிறது. நம்முடைய சுயபலத்தினால் நம்மைநாமே பலப்படுத்திக்கொள்ள முடியாது. தேவனுடைய கிருபையினாலும் அவருடைய மகிமையான வல்லமையினாலுமே நாம் பலப்படுத்தப்பட முடியும்.

சுவிசேஷம்
கொலோ 1 : 12-14

கொலோ 1:12. ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,

கொலோ 1:13. இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்.

கொலோ 1:14. (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தினாலே நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பை உண்டுபண்ணியிருக்கிறார். இதுவே சுவிசேஷத்தின் உபதேசம் . அப்போஸ்தலர் பவுல் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரிக்கும்போது, நம்முடைய ஆத்தும இரட்சிப்பைப்பற்றியும் சொல்லுகிறார். சுவிசேஷத்தின் உபதேசத்தைச் சொல்லும்போது, பிதாவை ஸ்தோத்திரிக்கிறார் (கொலோ 1:13).

தேவனுடைய கிருபை நமக்குள் கிரியை செய்கிறது. தேவகிருபைக்காக நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் பண்ணவேண்டும். அப்போஸ்தலர் பவுல் பிதாவை ஸ்தோத்திரிக்கிறார். இருளின் அந்தகாரத்தினின்று அவர் நம்மை விடுதலையாக்கியிருக்கிறார். தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு பிதாவாகிய தேவன் நம்மை உட்படுத்தியிருக்கிறார். இதற்காக அவர் பிதாவை ஸ்தோத்திரம் பண்ணுகிறார். யாருடைய இருதயங்களிலெல்லாம் தேவனுடைய கிருபை கிரியை செய்கிறதோ அவர்களெல்லோரும் பிதாவை ஸ்தோத்திரிக்கவேண்டும். ஏனெனில் அவரே இருளின் அந்தகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கினவர்.

பிதாவானவர் தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு நம்மை உட்படுத்தியிருக்கிறார். கிறிஸ்துவின் சபையில் நம்மை அங்கத்தினராக்கியிருக்கிறார். ஒரு பாவி மனந்திரும்பும்போது, அவருடைய ஆத்துமா பிசாசின் ராஜ்யத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்குட்படுத்தப் படுகிறது. கிறிஸ்துவின் ராஜ்யம் பிதாவாகிய தேவனுடைய அன்பின் குமாரனுடைய ராஜ்யம்.

பிதாவானவர் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியுள்ளவர்களாக்கியிருக்கிறார். அவரே நமக்கு கிருபையும் மகிமையும் தருகிறார். ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் நாம் பங்கடைவது நமக்கு மகிமை. இது நமக்கு சுதந்தரமாகக் கொடுக்கப்படுகிறது. இந்தச் சுதந்தரத்தின்படி நாம் அவருடைய பிள்ளைகளாகிறோம். பிள்ளைகளுக்குரிய சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

மேலும் இந்தச் சுதந்தரம் பரிசுத்தவான்களுடைய சுந்தரமாகவும் இருக்கிறது. இந்தப் பூமியில் பரிசுத்தவான்களாயிராதவர்கள், பரலோகத்திலும் பரிசுத்தவான்களாயிருக்க மாட்டார்கள். இந்தச் சுதந்தரம் ஒளியிலுள்ள சுதந்திரம். தேவனே ஒளியாக இருக்கிறார். நாம் தேவனோடு ஐக்கியமாகயிருப்பதன் மூலமாய் ஒளியிலுள்ள சுதந்தரத்தில் பங்குபெறுகிறோம்.

ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் நாம் பங்கடைவது, பிதவானவர் நமக்குக் கொடுக்கிற கிருபை. பிதவானவரே இந்தச் சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியுள்ளவர்களாக்கியிருக்கிறார். இந்தச் சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நமக்குச் சொந்தமாக எந்தத் தகுதியுமில்லை. இந்தத் தகுதியை பிதாவானவரே நமக்குக் கொடுக்கிறார். பரலோகத்திற்கு நியமிக்கப் பட்டவர்களெல்லோரும், இப்பொழுதே பரலோகத்திற்குத் தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ளவேண்டும். நாம் இந்தப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கும்போது நம்மை பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும். நம்முடைய மனதையும் இருதயத்தையும் புதுப்பித்துக் கொள்ளவேண்டும். இப்பிரபஞ்சத்தின்மீது நாம் ஆசை வைக்கக்கூடாது. நாம் இந்தப் பூமியில் ஜீவித்தாலும், நமக்குள் பரலோகத்தைப்பற்றிய சிந்தையே நிரம்பியிருக்கவேண்டும்.

பிள்ளைகளுக்குரிய சுதந்தரத்தில் பங்கடைகிறவர்கள், பிள்ளைகளுக்குரிய பயிற்சிகளையும் உபதேசங்களையும் பெற்றுக்கொள்ளவேண்டும். நாம் பரலோகத்தின் சுதந்தரத்தில் பங்கடைவோம் என்பதற்கு, பரிசுத்த ஆவியானவர் தாமே நம்முடைய இருதயத்தில் அச்சாரமாகயிருக்கிறார். "அச்சாரம்" என்பது "முன்பணம்" செலுத்துவதைக் குறிக்கிற வார்த்தை. மீதமுள்ள முழுத்தொகையும் செலுத்தப்படும் என்பதற்கு அச்சாரம் ஒரு ஆதாரமாகயிருக்கிறது.

மீட்பர்
கொலோ 1 : 15-18

கொலோ 1:15. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்.

கொலோ 1:16. ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப் படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத் துவங்களானாலும், துரைத்தனங்க ளானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.

கொலோ 1:17. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

கொலோ 1:18. அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி அப்போஸ்தலர் பவுல் மகிமையான காரியங்களை எழுதுகிறார். பவுலின் இருதயத்தில் கிறிஸ்துவைப்பற்றிய சிந்தனை நிரம்பியிருக்கிறது. அவர் இயேசுகிறிஸ்துவைப்பற்றி எழுதும்போது, அவரை தேவனாகவும், மத்தியஸ்தராகவும் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்து அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்து பிதாவின் சாயலாகயிருக்கிறார். ஒரு குமாரன் அவருடைய பிதாவின் சாயலாகயிருப்பதுபோல, குமாரனாகிய இயேசுகிறிஸ்து பிதவாகிய தேவனுடைய சாயலாகயிருக்கிறார். இயல்பாகவே இயேசுகிறிஸ்துவிடம் பிதாவின் சுபாவம் இருக்கிறது.

இயேசுகிறிஸ்து சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். பூமியிலுள்ள சர்வசிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து இருந்திருக்கிறார். இயேசுகிறிஸ்து நித்தியகாலமாக ஜீவிக்கிறவர். வேதவசனத்தின் பிரகாரமாக, இயேசுகிறிஸ்துவின் நித்தியத்துவத்தை விவரிப்பதற்கு, "அவர் சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறாகயிருக்கிறார்" என்றே சொல்லவேண்டும். எல்லா காரியங்கள்மீதும் இயேசுகிறிஸ்துவுக்கு ஆளுகையுள்ளது. ஒரு குடும்பத்தில் முதலாவதாக பிறந்திருக்கிற மூத்தகுமாரன் சேஷ்டபுத்திரனாகயிருப்பார். அவருக்கு அந்தக் குடும்பத்திலுள்ள இளையகுமாரர் எல்லார்மீதும் அதிகாரமும் ஆளுகையும் இருக்கும். அதுபோலவே இயேசுகிறிஸ்து சர்வசிருஷ்டிக்கும் முந்தின பேறானவராக இருப்பதினால், அவருக்கு சர்வசிருஷ்டியின்மீது ஆளுகையும் அதிகாரமுமுள்ளது.

இயேசுகிறிஸ்து முந்தினபேறாக பிறந்தவர். இதன்மூலமாய் அவர் ஒரு சிருஷ்டியாகயிருக்கிறார். அதே சமயத்தில் அவர் சிருஷ்டிகராகவும் இருக்கிறார். ஏனெனில் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும் சகலமும் அவரைக் கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும் அப்படியே சிருஷ்டிக்கப்பட்டது.

வானத்திலே ஏராளமான தேவதூதர்கள் இருப்பதை பவுல் இங்கு குறிப்பிடுகிறார். சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள் ஆகிய சகலமும் இயேசுகிறிஸ்துவைக் கொண்டும், இயேசுகிறிஸ்துவுக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. எல்லாவற்றிற்கும் இயேசுகிறிஸ்துவே காரணமாகயிருக்கிறார். அவரே முடிவாகவும் இருக்கிறார். ஆதியும் அவரே. அந்தமும் அவரே.

இயேசுகிறிஸ்து எல்லாவற்றிற்கும் முந்தினவர். இந்த உலகம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து இருந்தார். சர்வசிருஷ்டிக்கும் முந்தி அவர் இருந்தார். அவர் நித்திய தேவன். நித்தியகாலதமாக இருக்கிறார். இயேசுகிறிஸ்து கன்னிமரியாளின் வயிற்றில் பிறந்தபோது, அவர் மனுஷரூபமெடுத்து இந்தப் பூமியில் அவதரித்தார். அவர் இந்தப் பூமியில் பிறப்பதற்கு முன்பாகவே, நித்தியகாலமாக இங்கு இருக்கிறார். அவர் எல்லா காலத்திற்கும் முந்தினவர். எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் சர்வசிருஷ்டியும் நிலைநிற்கிறது. சர்வசிருஷ்டியும் இணைக்கப்படுகிறது. சர்வசிருஷ்டியும் எந்தெந்த நிலையில் இருக்கவேண்டுமோ அந்தந்த நிலைமையில் இயேசுகிறிஸ்துவுக்குள் நிலைநிற்கிறது.

இயேசுகிறிஸ்து தேவனுக்கும் மனுஷருக்கும் இடையே மத்தியஸ்தராகயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவே சரீரமாகிய சபைக்குத் தலைவர். அவர் கர்த்தத் துவங்களுக்கும், துரைத்தனங்களுக்கும், அதிகாரங்களுக்கும் தலைவராக யிருக்கிறார். அதே சமயத்தில் சபையாகிய சரீரத்திற்கும் இயேசுகிறிஸ்துவே தலையாகயிருக்கிறார். எல்லா கிருபைகளும், வல்லமைகளும் இயேசுகிறிஸ்துவிடமிருந்தே புறப்பட்டு வருகிறது.

இயேசுகிறிஸ்துவே எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார். அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர் (கொலோ 1:18). இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த உயிர்த்தெழும் வல்லமையினால், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். நாமும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுவோம் என்பதற்கு, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமக்கு அடையாளமாயிருக்கிறது.

அவர் எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கிறார். எல்லா தேவதூதர்களுக்கும், பரலோகத்திலுள்ள எல்லா கர்த்தத்துவங்களுக்கும் இயேசுகிறிஸ்துவே முதல்வராயிருக்கிறார். மனுஷர் மத்தியிலே இயேசுகிறிஸ்துவே முதல்வராயிருக்கிறவர். சகலபரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் மூலமாய் பூலோகத்தி லுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்வது பிதாவுக்குப் பிரியமாயிற்று (கொலோ 1:20). இயேசுகிறிஸ்து தமக்காகவும் சகல பரிபூரணமுள்ளவராகயிருக்கிறார். அதே வேளையில் அவர் நமக்காகவும் சகல பரிபூரணமுள்ளவராகயிருக்கிறார்.

இரட்சிப்பு
கொலோ 1 : 19-22

கொலோ 1:19. சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும்,

கொலோ 1:20. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்தி லுள்ளவைகள் பரலோகத்தி லுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக் கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று.

கொலோ 1:21. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்.

கொலோ 1:22. நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர் களானால் அப்படியாகும்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தினால் நமக்கு பாவமன்னிப்பு உண்டாகிறது. இயேசுகிறிஸ்துவுக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோ 1:14). நாம் மீட்கப் பட்டவர்களாகயிருப்போமென்றால், நம்முடைய பாவங்களிலிருந்து நாம் மீட்கப்படவேண்டும். இயேசு கிறிஸ்துவுக்குள் நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாகிறது.

நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு ஒப்புரவாகிறோம். பூலோகத்திலுள்ளவைகள், பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் இயேசுகிறிஸ்து மூலமாய் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்வது, பிதாவாகிய தேவனுக்குப் பிரியமாயிற்று. தேவனுக்கும் மனுஷருக்கும் இடையில் நடைபெறுகிற ஒப்புரவாகுதலில், இயேசு கிறிஸ்துவே மத்தியஸ்தராகயிருக்கிறார். அவர் மனுக்குலத்திற்கு சமாதானத்தை அறிவிக்கிறார். பாவிகளுக்கு பாவமன்னிப்பைக் கொடுக்கிறார். சர்வசிருஷ்டிகளையும் பரிசுத்தப்படுத்தி ஒரே ஐக்கியமாக்குகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலமாய் பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளும் தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறது.

புறஜாதியார் முன்னே தேவனுக்கு அந்நியராயும், தங்களுடைய துர்க்கிரியைகளினால் தங்கள் மனதிலே தேவனுக்கு சத்துருக்களாயும் இருந்தார்கள். இயேசுகிறிஸ்துவோ அந்தப் பகையை சிலுவையில் முறித்துப்போட்டார். இப்போது நாம் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு ஒப்புரவாகியிருக்கிறோம். பகை முறிந்துபோயிற்று. தேவனுடைய சத்துருக்கள் யாராகயிருந்தாலும், அவர்கள் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தேவனோடு ஒப்புரவாவதற்கு வாய்ப்புள்ளது. நாம் ஒப்புரவாகவில்லையென்றால் அது தேவனுடைய தப்பிதமல்ல. நம்முடைய ஒப்புரவாகாமைக்கு நாமே காரணம்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே நமக்கு சமாதானத்தை உண்டாக்கியிருக்கிறார். தம்முடைய மாம்ச சரீரத்தில் இயேசுகிறிஸ்து அடைந்த மரணத்தினாலே, இப்போது நம்மை தேவனோடு ஒப்புரவாக்கியிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுள்ளது. தேவன் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தைப் பார்த்து, நம்மீது இரக்கம் காண்பிக்கிறார். நம்முடைய பாவங்களை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். நம்மோடு ஒப்புரவாவாதற்கு சம்மதம் தெரிவிக்கிறார்.

நாம் இதுவரையிலும் தேவனுக்கு அந்நியராயிருந்தோம். நம்முடைய துர்க்கிரியைகளினால், நம்முடைய மனதிலே தேவனுக்கு சத்துருக்களாயிருந்தோம். அப்படியிருந்த நம்மை பரிசுத்தராகவும், குற்றமற்றவர்களாகவும், கண்டிக்கப்படாதவர்களாகவும், இயேசுகிறிஸ்து தேவனுக்கு முன்பாக நிறுத்துகிறார். தம்முடைய இரத்தத்தினாலும், தம்முடைய மாம்ச மரணத்தினாலும் இயேசுகிறிஸ்து நம்மை தேவனோடு ஒப்புரவாக்குகிறார். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டாகிற பாவமன்னிப்பாகிய மீட்பை விசுவாசிக்கிற எல்லோரோடும் பிதாவானவர் ஒப்புவாகுகிறார். இயேசு கிறிஸ்துவே தேவனுக்கும் மனுஷருக்கும் நடுவே மத்தியஸ்தராயிருக்கிறார். அவரே ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நிறைவேற்றுகிறார்.

சுவிசேஷப் பிரசங்கம்
கொலோ 1 : 23-29

கொலோ 1:23. அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்.

கொலோ 1:24. இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில் சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக, என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன்.

BELLWETHER INTERNATIONAL

கொலோசெயர் - விரிவுரை
COLOSSIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

கொலோ 1:25. ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு,

கொலோ 1:26. உங்கள் பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன்.

கொலோ 1:27. புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப் படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.

கொலோ 1:28. எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.

கொலோ 1:29. அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. சுவிசேஷம் யாரையும் புறம்பே தள்ளுவதில்லை. நாமாகவே சுவிசேஷத்திற்கு செவிகொடுக்காமல் புறம்பே போனால்தான், நாம் சுவிசேஷத்திற்கு அந்நியராகயிருப்போம். மற்றபடி சுவிசேஷம் எல்லோருக்குமே பொதுவானது.

அப்போஸ்தலர் பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கு ஊழியக்காரராயிருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற ஊழியம் தனக்குக் கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம் என்று பவுல் நினைக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது தனக்கு மேன்மையாயிருக்கிறது என்றும் சொல்லுகிறார்.

இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்தது. இப்பொழுது தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு, இதுவரையிலும் இரகசியமாயிருந்த தேவவசனம் வெளியாக்கப்பட்டிருக்கிறது. இப்போது வெளிப்படுத்தப் பட்டிருக்கிற தேவவசனத்தை பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு அப்போஸ்தலர் பவுல் ஊழியக்காரராயிருக்கிறார். சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிற உத்தியோகத்தை தேவனே பவுலுக்கு அளித்திருக்கிறார் (கொலோ 1:26). சுவிசேஷ ஊழியத்தை பவுல் தேவனிடமிருந்து ஒரு ஈவாகப் பெற்றிருக்கிறார். இந்த ஈவு பவுலுக்குக் கிடைத்திருக்கிற சிலாக்கியம்.

சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிற ஊழியத்தை, "உங்கள் பொருட்டு" தேவன் தனக்கு அளித்திருப்பதாக பவுல் அறிக்கை செய்கிறார். கர்த்தருடைய ஊழியக்காரர்களெல்லோரும் அவருடைய ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும். தேவவசனத்தை பூரணமாய்த் தெரியப்படுத்தவேண்டும். அவர்களுடைய இருதயத்தில் தேவவசனம் முழுவதுமாக நிரம்பியிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் பாடுகளையும் உபத்திவரங்களையும் அனுபவித்து கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்கிறார். அவர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணியதினிமித்தம் பவுல் பாடுகளை அனுபவித்தார். இந்தப் பாடுகளில் பவுல் சந்தோஷமடைகிறார். ஜனங்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும்போது அவர்களுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதமுண்டாகும். அவர்களுக்கு நன்மை உண்டாகும். அப்படிப்பட்ட நன்மையினிமித்தமாக பவுல் பாடுகளை அனுபவிக்கிறார். அதற்காக சந்தோஷப்படுகிறார்.

கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை, அவருடைய சரீரமாகிய சபைக்காக, பவுல் தன் மாம்சத்திலே நிறைவேற்றுகிறார். தன்னுடைய பாடுகளையும், மற்ற ஊழியக்காரர்களின் பாடுகளையும் பவுல் கிறிஸ்துவினுடைய உபத்திரவங்கள் என்று சொல்லுகிறார். இந்தப் பாடுகளை ஊழியக்காரர்கள் கிறிஸ்துவுக்காக அனுபவிக்கிறார்கள். மனுக்குலத்தை இரட்சிப்பதற்காக இயேசுகிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிலுவையிலே சிந்தினார். தம்முடைய சரீரத்தை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவின் உபத்திரவங்களைப் பார்க்கும்போது பவுலின் உபத்திரவம் குறைவானதாக இருக்கிறது. இன்னும் அதிக உபத்திரவங்களை அனுபவிக்க பவுல் ஆயத்தமாயிருக்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் எல்லா மனுஷருக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணுகிறார். எந்த மனுஷனையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பவுல் அறிவிக்கிறார். இதற்காக எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறார் (கொலோ 1:28).

ஜனங்கள் பாவம் செய்யும்போது அவர்களை எச்சரிக்கவேண்டும். அவர்களைக் கண்டித்து உணர்த்தவேண்டும். அவர்களுக்குப் புத்திசொல்லவேண்டும். அவர்கள் திருந்துவதற்காகவே ஊழியக்காரர்கள் ஜனங்களுக்கு உபதேசம்பண்ணுகிறார்கள். எல்லா மனுஷருக்கும் சுவிசேஷத்தின் வார்த்தையை எச்சரிப்பாகச் சொல்லவேண்டும். எல்லா மனுஷருக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணவேண்டும். நாம் பிறருக்கு ஊழியம் செய்யும்போது, ஊழியத்திற்கு சாதகமான காலத்தைத் தெரிந்தெடுத்து, இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தை நிறைவேற்றவேண்டும்.

ஒவ்வொரு ஊழியக்காரர்களிடத்திலும் வெவ்வேறு தாலந்துகள் இருக்கும். கர்த்தர் தங்களுக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை, தேவனுடைய நாமமகிமைக்காகவும், பரிசுத்தவான்களின் பிரயோஜனத்திற்காகவும் பயன்படுத்த வேண்டும். எல்லா மனுஷரையும் கிறிஸ்துவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு அவர்களுக்கு ஊழியம் செய்யவேண்டும். இயேசுகிறிஸ்துவை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். அவர்களுக்குப் புத்திசொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணவேண்டும்.

தங்கள் மூலமாக சுவிசேஷத்தைக் கேட்கிற ஜனங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக இருக்கவேண்டுமென்று ஊழியக்காரர்கள் விரும்பவேண்டும். அப்போஸ்தலர் பவுலுக்குள் அப்படிப்பட்ட வாஞ்சை இருந்தது. அதற்காக பவுல் தனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற, இயேசுகிறிஸ்துவினுடைய பலத்தின்படி போராடி பிரயாசப்படுகிறார். பவுல் இயேசுகிறிஸ்துவுக்காக உண்மையாய் ஊழியம் செய்யும்போது, கர்த்தர் பவுலுக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிறார்.

BELLWETHER INTERNATIONAL

கொலோசெயர் - விரிவுரை
COLOSSIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

கிறிஸ்துவானவர் விசுவாசிகளுக்குள் மகிமையின் நம்பிக்கையாக இருக்கிறார். இது ஒரு இரகசியம். இந்த இரகசியம் இதுவரையிலும் மறைவாயிருந்தது. இந்த இரகசியத்தை தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு இப்போது தெரியப்படுத்த சித்தமுள்ளவராக யிருக்கிறார். இந்த இரகசியம் புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய மகிமையின் ஐசுவரியமாகயிருக்கிறது. கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள்ளிருப்பதே அந்த இரகசியம்.

கிறிஸ்துவே மகிமையின் நம்பிக்கையாயிருக்கிறார். இந்த உலகத்தில் கிறிஸ்துவே நம்முடைய நம்பிக்கைக்கு ஆதாரமாகயிருக்கிறார். நம்முடைய இருதயத்தில் இயேசுகிறிஸ்து வாசமாயிருப்பதே நம்முடைய மகிமையின் நம்பிக்கை. சுவிசேஷத்தைக் கேட்கிற ஜனங்களுக்கு ஒரு கடமை உண்டு. நாம் கேட்ட சுவிசேஷத்தினால் நமக்கு நம்பிக்கை உண்டாகும். அந்த நம்பிக்கையை விட்டு நாம் அசையாமலிருக்கவேண்டும். அந்த விசுவாசத்தில் ஸ்திரமாயும் உறுதியாயும் நிலைத்திருக்கவேண்டும். நம்முடைய விசுவாசத்தில் நாம் தொடர்ந்து நிலைத்திருக்கவேண்டும். அப்போதுதான் நம்முடைய விசுவாசத்தின் முடிவு சந்தோஷமாகவும் ஆசீர்வாதமாகவும் இருக்கும். நம்முடைய விசுவாசத்தில் அங்கும் இங்கும் அலைபாயக்கூடாது. ஸ்திரமாயும் உறுதியாயும் நிலைத்திருக்கவேண்டும்.

2 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் கொலோசெயர்மீது தனக்குள்ள கரிசனையைப்பற்றிச் சொல்லுகிறார் (கொலோ 2:1-3). யூதமார்க்கத்திலிருந்து வந்திருக்கிற கள்ளப்போதகர்களுக்கு எச்சரிக்கையாயிருக்குமாறு புத்தி சொல்லுகிறார் (கொலோ 2:4-7). புறஜாதியாருடைய லௌகீக ஞானத்திற்கும் மாயமான தத்துவத்திற்கும் எச்சரிக்கையாயிருக்குமாறும் புத்தி சொல்லுகிறார் (கொலோ 2:8-12). விசுவாசிகளின் சிலாக்கியங்களை பவுல் தெளிவுபடுத்துகிறார் (கொலோ 2:13-15). தேவதூதரை ஆராதிக்கவேண்டுமென்று யாராவது சொன்னால் அவர்களைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்குமாறு பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (கொலோ 2:16-23).

என் முகத்தைக் காணாதிருக்கிறவர்கள் கொலோ 2 : 1-3

கொலோ 2:1. உங்களுக்காகவும் லவோதிக் கேயாவிலிருக்கிறவர்களுக் காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்.

கொலோ 2:2. அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்து கொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்.

கொலோ 2:3. அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங் களெல்லாம் அடங்கியிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெ பட்டணத்திற்கு ஒருமுறைகூட போனதில்லை. ஆனாலும் அங்குள்ள விசுவாசிகள்மீது பவுல் மிகுந்த கரிசனையோடிருக்கிறார். தான் ஸ்தாபித்த சபைகளிலுள்ள விசுவாசிகளிடத்தில் எவ்வளவு பிரியமாயிருப்பாரோ, அதுபோலவே கொலோசெ பட்டணத்திலுள்ள விசுவாசிகளிடத்திலும் பிரியமாயிருக்கிறார். அவர்களுக்கு நிருபம் எழுதும்போது "உங்களுக்காகவும் லவோதிக்கேயாவி லிருக்கிறவர்களுக்காகவும், சரீரத்தில் என் முகத்தைக் காணாதிருக்கிற மற்றெல்லாருக்காகவும் மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறிய விரும்புகிறேன்" என்று எழுதுகிறார்.

பவுல் விசுவாசிகள்மீது மிகுந்த அன்பாயிருக்கிறார். அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தைக்குறித்து கரிசனையோடிருக்கிறார். இதனால் அவருக்குள் மிகுந்த போராட்டமுண்டாயிற்று. அவருடைய இருதயத்திற்குள் வியாகுலத்தைப்போன்ற ஒரு போராட்டம் வந்திருக்கிறது. கர்த்தருக்குள் விசுவாசிகளாயிருக்கிற சிலரை நாம் இதுவரையிலும் பார்க்காதிருந்திருப்போம். அவர்களோடு தனிப்பட்ட முறையில் நமக்குப் பழக்கம் இருக்காது. ஆனாலும் அவர்கள்மீதும் நாம் அன்பாயிருக்கலாம். அவர்களோடும் நாம் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், பரிசுத்த அன்போடும் ஐக்கியம் வைத்துக்கொள்ளலாம். நாம் சமீபத்தில் இல்லாவிட்டாலும், தூரத்திலிருக்கும்போதுகூட, அவர்களோடு அன்பாயிருக்கலாம். விசுவாசிகளாகிய நாம் ஏராளமான விசுவாசிகளை இதுவரையிலும் சரீரத்தில் பார்த்ததில்லை. அவர்களை நாம் பரலோகத்தில் பார்ப்போம் என்னும் நம்பிக்கை நமக்குண்டு.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெ சபையிலுள்ள விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் உண்டாக வேண்டும் என்று விரும்புகிறார். அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட வேண்டும். அவர்கள் அன்பினால் இணைக்கப்படவேண்டும். அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். இருதயம் தேற்றப்பட்டால்தான் சமாதானம் இருக்கும். சமாதானம் இருந்தால்தான் வளர்ச்சியிருக்கும். ஆத்துமாவின் செழிப்பே உண்மையான செழிப்பு. ஆகையினால் கொலோசெயரின் ஆத்துமா செழித்திருக்கவேண்டுமென்று பவுல் விரும்புகிறார்.

தேவனுடைய இரகசியத்தை அறிகிற அறிவு நமக்குள் வளர்ச்சி பெறவேண்டும். பிதாவாகிய தேவனையும், கிறிஸ்துவையும் அறிகிற அறிவில் நாம் தேர்ச்சி பெறவேண்டும். பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை விசுவாசிகள் அறிந்துகொள்ளவேண்டும். இந்த இரகசியத்தை அறிந்துகொள்கிற உணர்வின் பூரண நிச்சயம் நம்மிடத்தில் இருக்கவேண்டும். இதுவே விசுவாசிகளுக்கு மெய்யான ஐசுவரியம். இந்த ஐசுவரியங்களுக்கு கொலோசெயர் உரியவர்களாக இருக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். தேவனைப்பற்றி பேசினால் மாத்திரம் போதாது. அவருடைய சித்தத்தின்படி நாம் செயல்படவும் வேண்டும். அவருடைய விருப்பத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும். அவருடைய திட்டத்தை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய விசுவாசம் வளர்ச்சி பெறும்போது நமக்குள் இயேசுகிறிஸ்துவைப்பற்றி பூரண நிச்சயமுண்டாகும். பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை நாம் அறிந்துகொள்வோம். நம்முடைய விசுவாசம் வளர்ச்சி பெறும்போது, அந்த இரகசியத்தை நாம் அறிந்திருக்கிறோம் என்னும் நிச்சயம் நமக்குள்ளிருக்கும். பூரணமாய் நிதானித்து அறியும்போதுதான், நமக்கு பூரண நிச்சயமுண்டாகும்.

பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை இருதயத்தில் விசுவாசத்தால் மாத்திரம் போதாது. நம்முடைய விசுவாசத்தை வாயினால் அறிக்கைபண்ணவும் வேண்டும். இதுவே "அறிந்துகொள்கிற உணர்வின் பூரண நிச்சயம்" என்று அழைக்கப்படுகிறது. நம்முடைய அறிவும் பூரண நிச்சயமுள்ளதாயிருக்கவேண்டும். நம்முடைய விசுவாசமும் பெலமுள்ளதாயிருக்கவேண்டும். இவை இரண்டும் சேரும்போதுதான் நம்முடைய ஆத்துமா ஐசுவரியமுள்ளதாகயிருக்கும். நம்முடைய ஆத்துமா எல்லா ஐசுவரியத்திற்கும் உரியதாக இருக்கவேண்டுமென்றால், நம்மிடத்தில் இயேசுகிறிஸ்துவைப்பற்றி பூரண நிச்சயமுள்ள அறிவும், இயேசு கிறிஸ்துவின்மீது பலமுள்ள விசுவாசமும் இருக்கவேண்டும்.

விசுவாசிகளுடைய இருதயங்கள் தேற்றப்படவேண்டும். ஆத்துமா செழிக்கும்போது அந்த ஆத்துமாவில் சந்தோஷமும் சமாதானமும் நிரம்பியிருக்கும். விசுவாசிகள் அன்பினால் இணைக்கப்படவேண்டும். நம்முடைய விசுவாசம் பலமுள்ளதாயிருக்கும்போது நம்முடைய அன்பும் பரிசுத்தமாயிருக்கும். மற்ற விசுவாசிகளோடு நமக்கு நெருங்கிய அன்பு உண்டாகும். நம்முடைய ஆறுதல் பெருகும்.

அப்போஸ்தலர் பவுல் இயேசுகிறிஸ்துவைப்பற்றி விரிவாகச் சொல்லுகிறார் (கொலோ 2:2). கிறிஸ்துவைப்பற்றிச் சொல்லும்போது அவருடைய மகிமையைப்பற்றியும் சொல்லுகிறார். "இயேசு கிறிஸ்துவுக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ 2:3). ஞானத்தின் பொக்கிஷம் நம்மிடத்திலிருந்து மறைத்துவைக்கப்படவில்லை. அது இயேசுகிறிஸ்துவில் நமக்காக வைக்கப்பட்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவில் நமக்கு ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் அடங்கியிருக்கிறது. இவற்றை நாம் தேவைப்படும்போது எடுத்து பயன்படுத்தவேண்டும். அவருக்குள் மறைவாயிருக்கிற பொக்கிஷங்களை நாம் பெற்றுக்கொண்டு, அவருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெ சபையிலுள்ள விசுவாசிகளிடமிருந்து, சரீரத்தின்படி தூரமாயிருக்கிறார். ஆனாலும் தன்னுடைய ஆவியின்படி அவர்களோடு கூடவே இருக்கிறார். தூரத்திலிருந்தாலும், அவர்களுடைய ஒழுங்கையும், கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள அவர்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்து பவுல் சந்தோஷப்படுகிறார் (கொலோ 2:5). கொலோசெ சபையிலுள்ள விசுவாசிகள் இதுவரையிலும் அப்போஸ்தலர் பவுலின் முகத்தைக் கண்டதில்லை.

பவுலைப்போலவே நாமும் மற்ற விசுவாசிகளோடு, சரீரத்தின்படி தூரமாயிருக்கலாம். ஆனாலும் நம்முடைய ஆவியின்படி அவர்களுடனேகூட இருக்கவேண்டும். பவுல் இதுவரையிலும் கொலோசெ சபைக்குப் போனதில்லை. அங்குள்ள விசுவாசிகளைப் பார்த்ததில்லை. ஆனாலும் அவர்கள் விசுவாசத்தின் உறுதியைக் கேள்விப்படுகிறார். தான் கேள்விப்பட்டதைப் பார்த்ததுபோலவே சொல்லுகிறார். மற்ற விசுவாசிகள்மீது பவுல் அதிகமான அன்பு காண்பிக்கிறார். அவர்களுடைய நற்கிரியைகளைப்பார்த்து பவுல் சந்தோஷப்படுகிறார்.

கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கிற விசுவாசம் உறுதியாயிருக்கவேண்டும். அப்போது நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் ஒழுங்காயிருக்கும். நம்முடைய விசுவாசமும் உறுதியாயிருக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தைப் பார்க்கும்போது மற்ற விசுவாசிகளுக்கும் சந்தோஷமாயிருக்கும்.

உலக வழிபாடுகள்
கொலோ 2 : 4-12

கொலோ 2:4. ஒருவனும் நயவசனிப்பினாலே உங்களை வஞ்சியாதபடிக்கு இதைச் சொல்லுகிறேன்.

கொலோ 2:5. சரீரத்தின்படி நான் தூரமாயிருந்தும், ஆவியின்படி உங்களுடனே கூட இருந்து, உங்கள் ஒழுங்கையும், கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையும் பார்த்துச் சந்தோஷப்படுகிறேன்.

கொலோ 2:6. ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு,

கொலோ 2:7. நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக.

கொலோ 2:8. லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல.

கொலோ 2:9. ஏனென்றால், தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது.

கொலோ 2:10. மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.

கொலோ 2:11. அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்த சேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள்.

கொலோ 2:12. ஞானஸ்நானத்திலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்.

கொலோசெ சபையிலுள்ள விசுவாசிகள் மத்தியில் அவர்களை வஞ்சிக்கிறவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களைக்குறித்து கொலோசெயர் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். அவர்கள் நயவசனிப்பினாலே கொலோசெயரை வஞ்சிப்பதற்கு வகை தேடுகிறார்கள். ஒருவனும் தங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு கொலோசெயர் எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

சாத்தான் விசுவாசிகளுடைய ஆத்துமாக்களை வஞ்சித்து கொள்ளையிடுகிறான். ஆத்துமா கொள்ளையிடப்பட்டால் நமக்கு ஆத்தும மரணமுண்டாகும். அவன் நம்மை வஞ்சிப்பதற்கு முயற்சி செய்வான். அவனுடைய வஞ்சகத்திற்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது. அவனால் நம்மை வஞ்சிக்க முடியவில்லையென்றால், அவனால் நம்முடைய ஆத்துமாவை கொள்ளை கொண்டு போகமுடியாது. நம்முடைய ஆத்துமாவை சாத்தானால் அழிக்கமுடியாது. நம்முடைய பலவீனத்தினிமித்தமும், நம்முடைய மதியீனத்தினிமித்தமும் சாத்தான் நம்மை வஞ்சித்துவிடுவான். ஆகையினால் அவன் நம்மை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கவேண்டும்.

கள்ளப்போதகர்கள் சாத்தானுடைய பிரதிநிதிகளாக விசுவாசிகளை வஞ்சிக்கிறார்கள். அவர்களை வஞ்சிப்பதற்கு நயவசனப்பான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். நயவசனிப்பு ஒரு மாயவலையைப்போன்றது. அதில் சிக்கிக்கொள்கிறவர்களால் அதிலிருந்து மீளமுடியாது. ஒரு சிலர் அந்த வலையில் சிக்கிக்கொண்டாலும், தாங்கள் சிக்கிக்கொண்டதுகூட அவர்களுக்குத் தெரியாது. சாத்தான் தங்களுடைய ஆத்துமாக்களை அழிக்கும்போதுதான் இவர்களுக்கு தாங்கள் சிக்கியிருக்கிற ஆபத்து புரியும். சாத்தான் வஞ்சிக்கிறவன். பிசாசு தன்னுடைய நயவசனிப்பினால் ஏராளமான விசுவாசிகளை வஞ்சித்திருக்கிறான்.

நம்முடைய ஆத்துமாக்களை வஞ்சிக்கிறவர்களுக்கு விரோதமாக நாம் எச்சரிக்கையாயிருக்கவேண்டும். நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள். அவருக்குள் வேர்கொண்டவர்களாக இருக்கவேண்டும். அவர்மேல் கட்டப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அவருக்குள் நடக்கவேண்டும். நாம் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்படவேண்டும். ஸ்தோத்திரத்தோடே நம்முடைய விசுவாசத்தில் பெருகவேண்டும்.

எல்லா விசுவாசிகளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொண்டவர்கள். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுக்கிறவர்கள். அவருடைய சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவர்கள். அவருடைய உபதேசத்தின் பிரகாரம் ஜீவிக்கிறவர்கள். விசுவாசிகளுடைய ஆவிக்குரிய தரம் வித்தியாசமாகயிருக்கலாம். என்றாலும், எல்லா விசுவாசிகளிடத்திலும் கிறிஸ்துவைப்பற்றிய விசுவாசம் ஓரளவு இருக்கும்.

கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளெல்லோரும் அவருக்குள் நடக்கவேண்டும். ஒவ்வொரு நாளும் நாம் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டும். எப்போதும் ஜெபிக்கவேண்டும். நாம் இயேசுகிறிஸ்துவோடு எவ்வளவு நெருக்கமாக நடக்கிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் அவரோடு ஐக்கியமாயிருப்போம். நாம் கிறிஸ்துவோடு எவ்வளவு நெருக்கமாய் நடக்கிறோமோ அவ்வளவு அதிகமாய் அவருக்குள் வேர் கொண்டவர்களாயிருப்போம். அவருக்குள் கட்டப்பட்டவர்களாயிருப்போம். விசுவாசத்தில் உறுதிப்பட்டிருப்போம். நாம் எந்த அளவு கிறிஸ்துவுக்குள் வேர் கொண்டவர்களாயிருக்கிறோமோ, அந்த அளவுக்கு அவருக்குள் நெருக்கமாக நடப்போம்.

நமக்குப் போதிக்கப்பட்ட படியே நாம் அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். நமக்கு நல்ல போதனை தேவை. ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறுவதற்கு நமக்கு ஆவிக்குரிய போதனை வேண்டும். நமக்குப் போதிக்கப்பட்ட சத்தியத்திற்கு நாம் கீழ்ப்படியவேண்டும். நமக்குப் போதிக்கப்பட்ட படியே நாம் விசுவாசத்தில் உறுதிப்படவேண்டும். ஸ்தோத்திரத்தோடே விசுவாசத்தில் பெருகவேண்டும் (கொலோ 2:7).

லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் நம்மை கொள்ளைகொண்டு போகாதபடிக்கு விசுவாசிகளாகிய நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். இவையெல்லாம் மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றியதாயிருக்கிறது. இவை கிறிஸ்துவைப் பற்றினதல்ல. இவையெல்லாம் உலகப்பிரகாரமான தத்துவங்கள். இதில் உலகப்பிரகாரமான ஞானம் இருக்கலாம். ஆனால் இதில் ஆவிக்குரிய ஞானம் இல்லை. இதில் மாயமான தந்திரம் இருக்கலாம். ஆனால் இதில் உண்மையில்லை.

யூதமார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பாரம்பரிய பழக்க வழக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை கடைப்பிடித்து ஜீவிக்கிறார்கள். புறஜாதி மார்க்கத்தார் உலகப்பிரகாரமான தத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இவையெல்லாம் கிறிஸ்துவுக்கு அவர்களை அந்நியராக்குகிறது. உலக உபதேசங்கள் கிறிஸ்துவை விட்டு நம்மை கொள்ளை கொண்டு போய்விடும். ஆகையினால் இவற்றைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். நம்முடைய விசுவாசத்தை மற்றவர்களுடைய விசுவாசத்தின்மீது கட்டியெழுப்பக்கூடாது. கிறிஸ்துவே நம்முடைய விசுவாசத்திற்கு ஆதாரமாயிருக்க வேண்டும். நாம் மனுஷரைப் பின்பற்றிப்போனால், கிறிஸ்துவைப் பின்பற்றுவதிலிருந்து விலகிப்போய்விடுவோம்.

யூதமார்க்கத்தின் சடங்காச் சாரங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் நிழலாட்டமாயிருக்கிறது. கிறிஸ்துவே மெய்யானவர். யூதருடைய நியாயப் பிரமாணம் நிழலுக்கு ஒப்பாயிருக்கிறது. நிழலில் தேவனுடைய ஷேக்கைனா மகிமை இருக்காது. தேவனுடைய விசேஷித்த பிரசன்னம் நிழலில் இருக்காது. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக இயேசுகிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது.

சரீரம் ஆவிக்கு விரோதமானதல்ல. ஆனால் சரீரம் நிழலுக்கு விரோதமாகயிருக்கிறது. தேவத்துவத்தின் பரிபூரணம் இயேசுகிறிஸ்துவில் பிரத்தியட்சமாக வாசமாயிருக்கிறது. இது சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் நிறைந்திருக்கிறது. தேவத்துவத்தின் பரிபூரணம் இயேசுகிறிஸ்துவில் நிழலாட்டமாக இல்லை. அது சரீரப்பிரகாரமாக கிறிஸ்துவுக்குள் மெய்யாகவே வாசமாயிருக்கிறது.

கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை கிறிஸ்துவுக்குள் பெற்றிருக்கிறோம் (கொலோ 2:11). இது எந்த ஒரு சிருஷ்டியின் வல்லமையினாலும் செய்யப்படவில்லை. தேவஆவியானவரின் வல்லமையினால் நாம் கிறிஸ்துவுக்குள் விருத்தசேதனம் பெற்றிருக்கிறோம். நாம் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்திற்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டோம்.

யூதர்கள் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லுகிறார்கள். நியாயப்பிரமாணத்தின் மூலமாய் தாங்கள் பரிபூரணமுள்ளவர்களாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையில் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமே, இயேசுகிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறோம் (கொலோ 2:10). இயேசுகிறிஸ்து சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராயிருக்கிறார். நியாயப்பிரமாணம் குறைபாடுள்ளது. இது பூரணமானதல்ல. நியாயப் பிரமாணத்திலுள்ள குறைபாடுகளெல்லாம் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் சீர்செய்யப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவே சகலத்துரைத்தனங்களுக்கும் அதிகாரத்திற்கும் தலைவராகயிருக்கிறார்.

பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் இயேசுகிறிஸ்துவில் பரிபூரணமாயிருக்கிறது. இதைப்போலவே தாவீதின் ராஜ்யமும் இயேசு கிறிஸ்துவில்தான் பூரணமடைந்திருக்கிறது. இயேசுகிறிஸ்துவே வானத்திலும் பூமியிலுமுள்ள எல்லா அதிகாரத்திற்கும் கர்த்தராகவும் தலைவராகவும் இருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இயேசுகிறிஸ்துவுடனேகூட பரிபூரணமான ஐக்கியத்திலிருக்கிறோம். நாம் ஞானஸ்நானத்திலே இயேசு கிறிஸ்துவோடுகூட அடக்கம் பண்ணப்பட்டிருக்கிறோம். இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவனுடைய செயலின்மேல் நாம் விசுவாசமுள்ளவர்களாயிருக்கிறோம். ஆகையினால் கிறிஸ்துவுடனேகூட நாம் இறந்தவர்களாகவும் இருக்கிறோம். நாம் கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம். அவருடனேகூட எழுந்திருக்கிறோம். இவை இரண்டும் நம்முடைய ஞானஸ்நானத்தின் மூலமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது (கொலோ 2:12).

அப்போஸ்தலர் பவுல் கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தைப்பற்றி எழுதுகிறார். இது தேவனுடைய செயலின்மேலுள்ள விசுவாசத்தினால் உண்டாகிறது. ஞானஸ்நானத்தினாலே நாம் தேவனோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாயிருக்கிறோம் அவரோடுகூட மரணத்திலும் ஐக்கியமாக யிருக்கிறோம் விசுவாசத்தினாலே அவரோடுகூட உயிர்த்தெழுந்தவர் களாகவும் இருக்கிறோம். கிறிஸ்துவின் கிருபையினால் நாம் பாவத்திற்கு மரித்து நீதிக்குப் பிழைத்திருக்கிறோம்.

சிலுவையிலே வெற்றி சிறந்தார் கொலோ 2 : 13-15

கொலோ 2:13. உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடுகூட, உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து;

கொலோ 2:14. நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து;

கொலோ 2:15. துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்து கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நமக்கு யூதர்களைவிட மேன்மையான சிலாக்கியங்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவின் மரணம் நமக்கு ஜீவனைத் தருகிறது. நாம் பாவங்களினாலேயும், நம்முடைய மாம்ச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்தோம். அப்படிப்பட்ட நம்மை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மோடேகூட உயிர்ப்பித்திருக்கிறார். நம்முடைய அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்திருக்கிறார்.

பாவத்திலிருப்பது ஆவிக்குரிய மரணத்திலிருப்பதற்குச் சமம். பாவத்தில் விழுந்துவிடுகிறவர்கள் பாவத்தில் மரித்துப்போனவர்களாகயிருக்கிறார்கள். சரீரத்தில் மரணமுண்டாகும்போது அந்த மரணம் சரீரத்தை அழித்துப்போடுகிறது. அதுபோலவே பாவம் ஆத்துமாவை அழித்துப்போடுகிறது. மரித்துப் போனவனால் தனக்குத்தானே எந்த உதவியும் செய்யமுடியாது. மரித்துப் போனவனுக்கு சுயமாக எந்த வல்லமையும் இல்லை. அவனால் தன்னுடைய மரித்துப்போன நிலமையிலிருந்து உயிரோடு எழும்ப முடியாது. அவனுடைய சுயவல்லமையினால் அவனால் ஒன்றும் செய்ய இயலாது.

சரீரத்தில் மரித்துப்போனவர்களைப் போலவே, ஆவிக்குரிய ரீதியாக மரித்துப்போனவர்கள் செயலற்றவர்களாக இருக்கிறார்கள். இவர்களால், தங்களுடைய சுயவல்லமையினால் தங்களுடைய ஆவியை உயிர்ப்பிக்க முடியாது. இவர்கள் தங்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பெலனற்றவர்களாகவும், கிரியை செய்ய முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். பாவங்களினால் மரித்துப்போயிருக்கிற நம்முடைய நிலமை இப்படித்தான் இருக்கிறது.

நம்முடைய பாவங்களினாலே நாம் மரித்தவர்களாயிருந்தோம். இயேசுகிறிஸ்துவோ நம்மை தம்மோடுகூட உயிர்ப்பித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மரணம் நம்முடைய பாவத்திற்கான மரணம். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நம்முடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்கிற உயிர்த்தெழுதல்.

இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நமக்கு பாவமன்னிப்பு உண்டாகிறது. அவர் நம்முடைய அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்திருக்கிறார். அக்கிரமக்காரரின் அக்கிரமம் மன்னிக்கப்படும்போது, அக்கிரமக் காரருக்கு அது ஜீவனாகயிருக்கும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஒரு சில காரியங்கள் நமக்கு எதிரிடையாகவும், நமக்கு விரோதமாகவும் இருந்தது. இயேசுகிறிஸ்துவோ நமக்கு எதிரிடையாகவும், கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்துப்போட்டார். அதை முற்றிலுமாக அழித்துப்போட்டார் (கொலோ 2:14). நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடிக்கிறவர்கள் அதை முற்றிலுமாக கடைப்பிடிக்கவேண்டும். நியாயப்பிரமாணத்தின் எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படியாதவர்கள் சபிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். இதுவே மனுஷருக்கு விரோதமாக இருந்த கையெழுத்து.

இந்த கையெழுத்து நமக்கு எதிரிடையாகவும், நமக்கு விரோதமாகவும் இருந்தது. இது நமக்கு சாபமாகயிருந்தது. இயேசுகிறிஸ்து சிலுவையிலே ஆணிகளால் அறையப்பட்டபோது, நம்முடைய சாபங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவோடுகூட சிலுவையிலே ஆணிகளால் அறையப்பட்டது. கட்டளைகளால் நமக்கு விரோதமாக இருந்த கையெழுத்து என்பது நியாயப்பிரமாணத்தைக் குறிக்கிற வார்த்தையாகும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் கட்டளையை நடுவில் இராதபடிக்கு எடுத்து, அதை சிலுவையின்மேல் ஆணியடித்தார். நாம் இனிமேல் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை.

நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படியவில்லையென்றால் அது நமக்கு சாபம் என்று கட்டளை சொல்லுகிறது. ஆனால் இயேசுகிறிஸ்துவோ அந்த சாபத்தை சிலுவையின்மேல் ஆணியடித்துவிட்டார். மெய்யான பொருள் வரும்போது நிழலாயிருக்கிறவையெல்லாம் நம்மைவிட்டு நீங்கிப்போகும். கிறிஸ்துவின் பிரமாணம் நமக்கு வரும்போது, மோசேயின் நியாயப்பிரமாணம் நமக்கு நடுவில் இராதபடிக்கு எடுத்துப்போடப்படுகிறது.

இயேசுகிறிஸ்து அந்தகார வல்லமைகளின்மீது மகிமையாக வெற்றி சிறந்தார். துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டார். அவற்றை வெளியரங்கமான கோலமாக்கினார். அவற்றின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார் (கொலோ 2:15). நியாயப்பிரமாணத்தின் சாபம் நமக்கு விரோதமாகயிருக்கிறது. இதைப்போலவே சாத்தானுடைய வல்லமையும் நமக்கு விரோதமாகக் கிரியை செய்கிறது. சாத்தானுடைய கரங்களிலிருந்து நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, தம்முடைய பலத்த கரத்தினால் நம்மை விடுவித்து மீட்டுக்கொண்டார். சாத்தானுடைய அதிகாரங்களை தோல்வியடையச் செய்தார். இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாக பிசாசாலும் அவனுடைய துரைத்தனங்களாலும், அவனுடைய அதிகாரங்களாலும் எதிர்த்து நிற்கமுடியவில்லை. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவற்றின்மீது வெற்றி சிறந்து, அவற்றின் அதிகாரங்களெல்லாவற்றையும் உரிந்துபோட்டார்.

நம்முடைய மீட்பர் தம்முடைய மரணத்தின் மூலமாய் ஜெயம்பெற்றார். இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையும்போது அவருடைய சிரசில் முள்முடியை சூட்டினார்கள். இயேசுகிறிஸ்துவின் முள்முடி, அவருடைய சிலுவை மரணத்தின் மூலமாய், அவருக்கு மகிமையான கிரீடமாயிற்று. இயேசுகிறிஸ்துவோ துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, அவற்றை வெளியரங்கமான கோலமாக்கினார். இதுவரையிலும் சாத்தானுடைய ராஜ்யத்திற்கு இப்படிப்பட்ட தோல்வி உண்டானதில்லை. இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது சாத்தானுக்கு மிகப்பெரிய தோல்வி உண்டாயிற்று. அவனுடைய எல்லா துரைத்தனங்களின்மேலும், அதிகாரங்களின்மேலும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையிலே வெற்றி சிறந்தார். இயேசுகிறிஸ்துவின் சிலுவையினாலும், அவருடைய மரணத்தினாலும் கிறிஸ்துவுக்கு ஜெயமுண்டாயிற்று. சாத்தானுக்கு தோல்வி உண்டாயிற்று.

தேவதூதர்களுக்கு செய்யும் ஆராதனை கொலோ 2 : 16-23

கொலோ 2:16. ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப்பிறப்பையும் ஓய்வுநாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக.

கொலோ 2:17. அவைகள் வருங் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது.

கொலோ 2:18. கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல்,

கொலோ 2:19. மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்.

கொலோ 2:20. நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல,

கொலோ 2:21. மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின் படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன?

கொலோ 2:22. இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே.

கொலோ 2:23. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது.

யூதமார்க்கத்து கள்ளப்போதர்களைப்பற்றி அப்போஸ்தலர் பவுல் கொலோசெயருக்கு எச்சரித்துச் சொல்லுகிறார். போஜனத்தையும், பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும், மாதப்பிறப்பையும், ஓய்வு நாளையும் குறித்தாவது ஒருவனும் உங்களை குற்றப்படுத்தாதிருப்பானாக என்று சொல்லி பவுல் கொலோசெயரை எச்சரிக்கிறார். விசுவாசிகள்மீது இப்படிப்பட்ட காரியங்கள் எதையும் யாரும் கட்டாயமாய் திணிக்கக்கூடாது. ஏனெனில் தேவன் இந்தக் காரியங்கள் எதையும் நம்மீது திணிக்கவில்லை. ஆகையினால் இந்தக் காரியங்களைக் குறித்து ஒருவனும் நம்மைக் குற்றப்படுத்தக்கூடாது (கொலோ 2:16).

போஜனம், பானம், பண்டிகை நாள், மாதப்பிறப்பு, ஓய்வுநாள் ஆகியவையெல்லாம் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் இயேசுவைப் பற்றினது. இவற்றின் சரீரம் கிறிஸ்துவைப்பற்றியது. கிறிஸ்துவே சரீரமாயிருக்கிறார். மற்றவையெல்லாம் சரீரத்தின் நிழலாயிருக்கிறது. யூதர்கள் நிழலைப்பெற்றுக்கொண்டார்கள். நாமோ கிறிஸ்துவின் சரீரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் (கொலோ 2:17).

புறஜாதி தத்துவ மேதைகள் தேவதூதர்களுக்கு ஆராதனை செய்ய வேண்டுமென்று உபதேசம் பண்ணுகிறார்கள். அவர்கள் மாயமான மனத்தாழ்மையிலிருக்கிறார்கள். காணாதவைகளிலே அவர்கள் துணிவாய் நுழைகிறார்கள். தங்கள் மாம்ச சிந்தையில் அவர்கள் வீணாய் இறுமாப்பு கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் நம்முடைய பந்தயப்பொருளை நாம் இழந்துபோகும்படி செய்வதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இவர்கள் நம்மை வஞ்சித்துவிடாதவாறு நாம் மிகுந்த எச்சரிப்போடு இக்கவேண்டும் (கொலோ 2:19).

புறஜாதி மார்க்கத்தாரிடம் மெய்யான மனத்தாழ்மை இல்லை. அவர்களுடைய தாழ்மை மாயமானது. மாயமான மனத்தாழ்மையை கர்த்தர் அங்கீகரிக்கமாட்டார். கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை. இவர்களுடைய ஆராதனை ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டதல்ல. இது இவர்களுடைய சுயசித்தத்தினாலும், சுயவிருப்பதினாலும் உண்டாயிற்று. இவர்கள் தங்களுக்கு விருப்பமானவைகளையெல்லாம் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். தேவதூதர்களுக்கு ஆராதனை செய்ய வேண்டுமென்று விருப்பப்படுகிறார்கள். இது கர்த்தருடைய நியமனமல்ல. இது புறஜாதியாரின் விருப்பம்.

புறஜாதியார் காணாதவைகளிலே துணிகரமாய் நுழைகிறார்கள். தங்களுடைய மாம்சசிந்தையினால் வீணாய் இறுமாப்பு கொண்டிருக்கிறார்கள். இவர்கள் வெளிப்பார்வைக்கு மனத் தாழ்மையாயிருப்பதுபோல் நடிக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய மனமோ மாம்சசிந்தையினால் வீணாய் இறுமாப்புகொண்டிருக்கிறது.

இறுமாப்பு தேவனுக்கு விரோதமான பகை. மனதில் இறுமாப்பு இருக்கும்போது அவர்களுடைய சிந்தனை வீணாய்ப்போகும். தீமையான காரியங்களை துணிகரமாய்ச் செய்வார்கள். வெளிப்பார்வைக்கு இவர்கள் தாழ்மையானவர்கள்போல நடிப்பார்கள். ஆனால் இவர்களுடைய இருதயமோ இறுமாப்பு கொண்டிருக்கும். இருதயத்தில் இறுமாப்புடையவர்கள் யாருடைய உபதேசத்தையும் கேட்கமாட்டார்கள். யாருடைய புத்திமதிக்கும் செவிகொடுக்கமாட்டார்கள்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் சரீரம் முழுவதையும் ஆதரிக்கிற தலையைப்பற்றிக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவே நமக்குத் தலையாக இருக்கிறார். நம்முடைய சரீரம் கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டிருகிறது. இது தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே இந்தச் சரீரம் முழுவதையும் ஆதரிக்கிற தலையாயிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவாகிய தலையைப்பற்றிக்கொள்ள வேண்டும். புறஜாதி மார்க்கத்தாரோ தலையாகிய கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளவில்லை.

கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளாதவர்கள், தங்களுக்கு அருகாமையில் எது இருக்கிறதோ அதைப் பற்றிக்கொள்வார்கள். சரீரம் முழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொண்டால்தான், சரீரத்திற்கு ஜீவன் கிடைக்கும். நாம் தலைக்குப் பதிலாக வேறு எதைப் பற்றிக் கொண்டாலும் அது நமக்கு ஜீவனைத் தராது. ஏனெனில் நம்முடைய முழுசரீரமும் கணுக்களாலும், கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டிருக்கிறது. இது தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிறது. இயேசுகிறிஸ்து சரீரமாகிய சபைக்கு தலைவராகயிருக்கிறார். சபைக்கு ஜீவனைக் கொடுக்கிறவராகவும் இருக்கிறார். சரீரமாகிய சபை கிறிஸ்துவிடமிருந்தே ஜீவனைப் பெற்றுக்கொள்கிறது. கிறிஸ்துவின் சரீரம் வளர்ச்சி பெறுகிற சரீரம். இந்தச் சரீரம் தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரம். சரீரத்தின் வளர்ச்சி தேவகிருபையினால் மிகவும் அதிகமாயிருக்கும்.

அப்போஸ்தலர் பவுல் புறஜாதியாரைப்பற்றி கொலோசெயருக்கு எச்சரித்துச் சொல்லுகிறார். "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின் படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே" (கொலோ 2:20-22) என்று எச்சரிக்கிறார்.

நாம் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்துப்போனவர்கள். நாம் இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கக்கூடாது. உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின் படியும் நடந்துகொள்வார்கள். அவர்கள், "தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே" என்கிற கட்டளைகளுக்கு உட்படுவார்கள். இந்தக் கட்டளைகளெல்லாம் நிலைத்துநிற்பதில்லை. இவையெல்லாம் அனுபவிக்கிறதினால் அழிந்துபோகும். மனுஷருடைய பாரம்பரியமும், சடங்காச்சாரங்களும் அழிந்துபோகும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்மீது பாரம்பரிய சடங்காச்சாரங்களுக்கும், முன்னோர்களின் பிரமாணங்களுக்கும் அதிகாரமில்லை. ஏனெனில் நாம் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்துப்போனவர்கள்.

மனுஷருடைய கற்பனைகளும் போதனைகளும் ஒருவேளை "ஞானம்" என்கிற பெயர்கொண்டிருக்கலாம். இதில் "உலகப்பிரகாரமான ஞானம்" இருக்கலாம். ஆனால் இது ஆவிக்குரிய ஞானமில்லை. இதில் மாயமான தாழ்மையிருக்கலாம். ஆனால் இதில் மெய்யான தாழ்மையில்லை. மனுஷருடைய கற்பனைகளைப் போதிக்கிறவர்கள் தங்களை ஞானிகளாக நினைத்துக் கொள்கிறார்கள். மற்றவர்களைவிட தங்களுக்கு எல்லாம் தெரியுமென்று இறுமாப்பாயிருக்கிறார்கள். ஆனால் இவர்களுடைய ஆராதனையில் ஆவியுமில்லை உண்மையுமில்லை. இது இவர்களுடைய சுயஇஷ்டமான ஆராதனை.

கர்த்தரை ஆராதிக்கிறவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கவேண்டும். பாரம்பரிய பழக்க வழக்கத்தின் பிரகாரமாகவோ அல்லது முன்னோர்களுடைய பாரம்பரியத்தின் பிரகாரமாகவோ கர்த்தரை உண்மையாய் ஆராதிக்க முடியாது.

தேவனுக்கும் மனுஷருக்கும் இயேசுகிறிஸ்து மாத்திரமே மத்தியஸ்தராயிருக்கிறார். நமக்கும் தேவனுக்கும் நடுவில் எந்த தேவதூதரும் மத்தியஸ்தராக நியமிக்கப்படவில்லை.

புறஜாதியாருடைய போதகமெல்லாம் வெளிப்பார்வைக்கு ஞானமுள்ளதாக இருக்கலாம். இவர்கள் சரீரத்தை ஒடுக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்லலாம். இவர்களுடைய ஒவ்வொரு ஆலோசனையிலும், ஒவ்வொரு போதனையிலும் உலகப்பிரகாரமான ஞானம் வெளிப்படலாம். ஆனால் இந்த ஞானம் உண்மையான தேவஞானமல்ல. இது மெய்யாகவே மதியீனம். உண்மையான ஞானம் நம்மை சுவிசேஷத்திற்கு நேராக வழிநடத்தும். சுவிசேஷத்தின் உபதேசங்களுக்கு நம்மை கீழ்ப்படியச் செய்யும். கிறிஸ்துவுக்கு நம்மைப் பூரணமாய் அர்ப்பணிக்கச் செய்யும். இதுவே மெய்யான ஞானம். ஏனெனில் கிறிஸ்து மாத்திரமே சபையின் தலையாயிருக்கிறார்.

3 அதிகாரம்

நாம் பூமியிலுள்ளவைகளை நாடாமல் பரலோகத்திலுள்ளவைகளையே நாட வேண்டும் (கொலோ 3:1-4). நாம் பாவத்திற்கு மரித்தவர்களாயிருக்க வேண்டும் (கொலோ 3:5-11). விசுவாசிகளாகிய நாம் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். ஒருவருக்கொருவர் இரக்கத்தையும் தயவையும் காண்பிக்கவேண்டும் (கொலோ 3:12-17). மனைவிகள், புருஷர்கள், பிள்ளைகள், பிதாக்கள், வேலைக்காரர் ஆகியோரின் கடமைகள் (கொலோ 3:18-25).

மேலானவைகளையே நாடுங்கள் கொலோ 3 : 1-4

கொலோ 3:1. நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.

கொலோ 3:2. பூமியிலுள்ளவை களையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

கொலோ 3:3. ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

கொலோ 3:4. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

நியாயப் பிரமாணத்தின் கட்டளைகளிலிருந்து இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் நாம் விடுதலை பெற்றிருக்கிறோம். நமக்கு நியாயப் பிரமாணத்திலிருந்து விடுதலை கிடைத்திருப்பதினால், நமக்கு இஷ்டமான படி, எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்னும் அனுமதி நமக்குக் கொடுக்கப்படவில்லை. நாம் தேவனோடு நெருக்கமாக நடக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும். நாம் கிறிஸ்துவுடனேகூட எழுந்ததுண்டானால், பரலோகத்திலுள்ள மேலானவைகளைத் தேடவேண்டும் (கொலோ 3:1).

நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவித்தாலும் இப்பிரபஞ்சத்தைக் குறித்த கரிசனை நம்மிடத்தில் அதிகமாயிருக்கக்கூடாது. இப்பிரபஞ்சத்தைவிட பரலோகத்தைக் குறித்த சிந்தனையும் கரிசனையும் நம்மிடத்தில் அதிகமாயிருக்கவேண்டும். நாம் பரலோகத்திலுள்ள மேலானவைகளையே தேடவேண்டும். அவைகளையே நாடவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். நாம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, அங்கு நம்முடைய நல்ல சிநேகிதராக, நம்மை வரவேற்பதற்காக, அங்கு தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். பரலோகத்தின் சந்தோஷங்களை நமக்கு உறுதி பண்ணுவதற்காக கிறிஸ்துவானவர் பரமேறிப்போனார். அவர் அங்கு நமக்கு ஒரு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணுகிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்பூமிக்குரியவைகளை நாடாமல், கிறிஸ்துவானவர் தம்முடைய சுய இரத்தத்தினால் சம்பாதித்த நம்முடைய இரட்சிப்பின் சிலாக்கியத்தையே நாடவேண்டும்.

பூமியிலுள்ளவைகளை நாடாமல், மேலானவைகளை நாடுவது கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய கடமையாயிருக்கிறது. நாம் எதை நாடுகிறோமோ அதில் நம்முடைய இருதயம் நிலைத்திருக்கும். நம்முடைய விருப்பங்களெல்லாம் நம்முடைய இருதயத்திலிருந்தே புறப்பட்டு வரும். நாம் மேலானவைகளை நாடும்போது நம்முடைய இருதயம் முழுவதிலும் மேலான சிந்தனைகள் நிரம்பியிருக்கும்.

பரலோகமும் பூமியும் ஒன்றுக்கொன்று விரோதமானது. இவ்விரண்டும் ஒருபோதும் ஒத்துப்போகாது. நாம் இந்தப் பூமியின்மீது ஆசை வைக்கும்போது, பரலோகத்தின்மீது நாம் வைக்கவேண்டிய ஆசை குறைந்துபோகும். நாம் பூமியை அதிகமாக விரும்பும்போது, நம்மால் பரலோகத்தை அதிகமாய் விரும்ப முடியாது. ஆகையினால் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம், இப்பூமியிலுள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடவேண்டும் (கொலோ 3:2).

நாம் ஏன் மேலானவைகளை நாடவேண்டும் என்பதற்கு பவுல் மூன்று காரணங்களைச் சொல்லுகிறார். நாம் இப்போதுள்ள காரியங்களுக்கு மரித்தவர்களாக இருக்கிறோம். நாம் பூமிக்கு மரித்தவர்கள். நாம் இப்பிரபஞ்சத்திற்கு மரித்தவர்களாகயிருப்போமென்றால், நம்மிடத்தில் இப்பூமிக்குரிய ஆசை இருக்கக்கூடாது. இந்தப் பூமி நமக்குச் சந்தோஷத்தைத் தரக்கூடாது. நாம் பூமிக்குரிய காரியங்களுக்கு மரித்தவர்களாயிருப்பதினால், நம்மால் இந்தப் பூமியின்மீது பற்று வைக்கமுடியாது. பூமிக்குரியவைகளை நம்மால் தேடவோ, நாடவோ முடியாது.

நம்முடைய மெய்யான ஜீவன் பரலோகத்திலிருக்கிறது. நாம் இந்தப் பூமிக்கு மரித்திருக்கிறோம். நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது (கொலோ 3:3). நம்முடைய பழைய மனுஷன் மரித்துப்போனான். புதிய மனுஷனுக்கு பரலோகமே வாசஸ்தலம். இந்தப் புதிய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. இந்த ஜீவன் நம்மிடத்திலிருந்து மறைக்கப்படவில்லை. இது நமக்காக மறைந்திருக்கிறது. பாதுகாப்பாக மறைக்கப்பட்டிருக்கிறது. இது இரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் பாதுகாப்பாக மறைந்திருப்பது நமக்கு ஆறுதலான காரியம். நாம் கர்த்தருடைய கரத்திலிருக்கும்போது நமக்கு மெய்யாகவே பாதுகாப்பு உண்டு.

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நமக்கு பரிபூரணமான சந்தோஷமுண்டாகும். நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நாமும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவோம் (கொலோ 3:4). கிறிஸ்துவானவரே விசுவாசிகளுடைய ஜீவனாகயிருக்கிறார். விசுவாசிகளின் ஜீவியத்திற்கு கிறிஸ்துவே ஆதாரமாகவும் முடிவாகவும் இருக்கிறார். கிறிஸ்து மறுபடியும் வெளிப்படுவார். கிறிஸ்து இப்போது மறைவாகயிருக்கிறார். அவர் தம்முடைய மகிமையோடும், பிதாவின் மகிமையோடும் வெளிப்படுவார். அப்போது அவருடைய பிள்ளைகளாகிய நாமும், அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவோம்.

நாம் அவருடைய மகிமைக்காகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் மீட்கப்பட்டு அவருடைய மகிமையிலே மறைவாக வைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவோம். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் அந்த சந்தோஷமான நாளை நாடவேண்டும். பூமிக்குரியவைகளையல்ல, மேலானவைகளையே நாடவேண்டும். நாம் பரலோகத்தின் மகிமையை நாடும்போது, நாம் மேலானவைகளையே நாடுவோம். நம்முடைய சந்தோஷம் பரலோகத்திலிருக்கிறது. நம்முடைய தலையாகிய கிறிஸ்து பரலோகத்திலிருக்கிறார். நம்முடைய வாசஸ்தலம் பரலோகத்திலிருக்கிறது. நம்முடைய பொக்கிஷம் பரலோகத்திலிருக்கிறது. ஆகையினால் நம்முடைய நம்பிக்கையெல்லாம் பரலோகத்திலேயே நித்திய காலமாக நிலைத்திருக்கவேண்டும்.

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்
கொலோ 3 : 5-7

கொலோ 3:5. ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்:

கொலோ 3:6. இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும்.

கொலோ 3:7. நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள்.

நம்முடைய சரீரத்தின் அவயவங்களை நாம் கிறிஸ்துவுடனேகூட சிலுவையில் அறையவேண்டும். நாம் பாவத்திற்கும், இப்பிரபஞ்சத்திற்கும் மரித்தவர்கள். ஆகையினால் துன்மார்க்கமான இச்சைகளை உண்டுபண்ணுகிற நம்முடைய அவயவங்களை அழித்துப்போடவேண்டும் (கொலோ 3:5). அப்போஸ்தலர் பவுல் மாம்சத்தின் இச்சைகளைப்பற்றி இங்கு சொல்லுகிறார். விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவையெல்லாம் மாம்சத்தின் இச்சைகள். இவை கிறிஸ்துவின் சுபாவத்திற்கு முரணானவை. இவை பரலோகத்தின் நம்பிக்கைக்கு எதிரானவை.

இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைப்பது பாவம். அப்போஸ்தலர் பவுல் பொருளாசையைப்பற்றிச் சொல்லும்போது அதை விக்கிரகாராதனை என்று சொல்லுகிறார். இப்பிரபஞ்சத்தின் பொருட்கள்மீது அதிகமாய் ஆசை வைப்பதும், இப்பிரபஞ்சத்தின் ஆசாபாசங்களை அனுபவிக்க வேண்டுமென்று ஆசைப்படுவதும் பாவமான காரியம். பொருளாசை ஆவிக்குரிய விக்கிரகாராதனை. நாம் தேவனுக்கே நம்முடைய துதி கன மகிமையைச் செலுத்தவேண்டும். தேவனுக்குச் செலுத்தவேண்டியதை உலகப்பிரகாரமான ஐசுவரியத்திற்குச் செலுத்தும்போது, நம்முடைய பொருளாசை விக்கிரகாராதனையாக மாறிவிடுகிறது.

வேதாகமத்தில் பல பரிசுத்தவான்களைப் பற்றி எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுடைய சாட்சிகளெல்லாம் தெளிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது. அவர்களில் சிலர் பாவத்தில் விழுந்திருக்கிறார்கள். என்றாலும் வேதாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற எந்தப் பரிசுத்தவானும் விக்கிரகாராதனையான பொருளாசையில் விழுந்துவிடவில்லை. ஆகையினால் பொருளாசையைக் குறித்து நாம் மிகவும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும். பொருளாசையை உண்டுபண்ணுகிற நம்முடைய அவயவங்களை அழித்துப்போடவேண்டும்.

பொருளாசையினிமித்தமாய் கீழ்ப் படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நம்முடைய பாவங்களை நாம் அழித்துப் போடவில்லையென்றால் அவை நம்மை அழித்துப்போடும். நம்முடைய சரீரத்தின் மூலமாய்ச் செய்கிற பாவம், நம்முடைய சுபாவமாகிவிடும். நாம் பாவம் செய்யும்போது, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாகயிருக்கிறோம். கீழ்ப் படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை நிச்சயமாய் வரும்.

சட்டத்திற்குக் கீழ்ப்படியாதவர்கள் நிச்சயமாய் அதற்குரிய தண்டனைகளை அனுபவிக்கவேண்டும். ஆகையினால் நம்முடைய பாவங்களை நாம் அழித்துப்போடவேண்டும். ஏனெனில் இந்தப் பாவங்கள் நமக்குள் உயிரோடிருக்கிறது. நமக்குத் தீங்காக இருக்கும் இந்தப் பாவங்களை நாம் சிலுவையில் அறையவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமும் முற்காலத்திலே, அவிசுவாசிகளுக்குள்ளே சஞ்சரித்தோம். அப்போது அந்தப் பாவமான காரியங்களை நாமும் செய்துகொண்டு வந்தோம். நம்மிடத்தில் பாவம் இருந்தது. நாம் பாவத்தில் ஜீவித்தோம். ஆகையினால் அந்தப் பாவங்களை இப்போது அழித்துப்போடவேண்டும். நாம் கர்த்தரைப் பின்பற்றி அவருடைய பாதையில் நடவாமல், நமக்கு இஷ்டமான பாதையில் நடந்தோம்.

தேவனுடைய பாதை ஜீவன். நம்முடைய பாதை அழிவு. அழிவுக்கு நேராகச் செல்லும் பாதையிலிருந்து நாம் விலகி, ஜீவனுக்கு நேராகச் செல்லும் பாதைக்குத் திரும்பி வரவேண்டும். நாம் கீழ்ப்படியாமையின் பிள்ளைகளுக்குள்ளே சஞ்சரித்தபோது, மாம்ச இச்சைகளை நிறைவேற்றி வந்தோம். நாம் இனிமேல் அவைகளை விட்டு விலகி வரவேண்டும். கீழ்ப்படியாமையின் பிள்ளைகளை விட்டும், அழிவுக்கு நேராகச் செல்லும் அவர்களுடைய பாடுகளை விட்டும் நாம் விலகி வரவேண்டும்.

பழைய மனுஷனும் அவன் செய்கைகளும் கொலோ 3 : 8-11

கொலோ 3:8. இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள்.

கொலோ 3:9. ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு,

கொலோ 3:10. தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே.

கொலோ 3:11. அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.

பாவஇச்சைகளை உண்டுபண்ணுகிற அவயவங்களை நாம் அழித்துப்போடவேண்டும் (கொலோ 3:5). கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் செய்து வந்த காரியங்களை நாம் இனிமேல் செய்யாதிருக்கவேண்டும். அது மாத்திரமல்ல. இப்பொழுதோ, கோபமும் மூர்க்கமும், பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும், வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் நாம் விட்டுவிடவேண்டும். கோபமும் மூர்க்கமும் தீயசுபாவம். பொறாமை அதைவிட மோசமானது. கோபம் அதிகரிக்கும்போது மூர்க்கம் வரும். மூர்க்கம் அதிகரிக்கும்போது பொறாமை வரும்.

வம்பு வார்த்தை, தூஷணம் ஆகியவை கர்த்தருடைய பிள்ளைகளாகிய நம்முடைய வாயில் பிறக்கக்கூடாது. தேவதூஷணம் தேவனுக்கு விரோதமாக பேசப்படுகிற வார்த்தை. இதே தூஷண வார்த்தைகளை ஒரு சிலர் மனுஷருக்கு விரோமாகவும் பேசுகிறார்கள். மற்றவர்களைப்பற்றி வம்பு வார்த்தைகளைப் பேசுகிறார்கள். இவையெல்லாம் ஆகாத சம்பாஷணைகள். இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கேட்கிறவர்களுக்கு பக்திவிருத்தி உண்டாகாது. அதற்குப் பதிலாக அவர்களுக்கும் கோபம், மூர்க்கம், பொறாமை ஆகியவை உண்டாகும்.

கர்த்தருடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் பொய்சொல்லக்கூடாது. நாம் பொய்சொல்லும்போது பிசாசின் சுபாவத்தைப் பெற்றுக்கொள்கிறோம். பிசாசு பொய்களுக்குத் தகப்பனாகயிருக்கிறான். நாம் பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோடவேண்டும். புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ள வேண்டும் (கொலோ 3:9,10). பழைய மனுஷனை களைந்துபோடுகிறவர்கள், அவனுடைய செய்கைகளையும் சேர்த்துக் களைந்து போட்டு விடவேண்டும். அதுபோலவே புதிய மனுஷனைத் தரித்துக்கொள்கிறவர்கள், புதிதாக்கப்பட்ட புதிய கிரியைகளைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தரே நம்மை சிருஷ்டித்தவர். நாம் கர்த்தருடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவடையவேண்டும். நம்முடைய அறிவில் புதிதாக்கப்பட வேண்டும். அறியாமையிலிருக்கிற ஆத்துமா நல்ல ஆத்துமாவாக இருக்காது. பூரண அறிவு வரும்போதுதான் நம்முடைய மனம் புதிதாகும். கர்த்தரைப்பற்றி அறிகிற அறிவே பூரண அறிவு. நாம் புதிய சிருஷ்டியாகும்போது, நமக்குக் கிடைக்கிற முதலாவது ஆசீர்வாதம் வெளிச்சம் தான். நம்முடைய பழைய ஜீவியத்தில் நாம் இருளின் பிள்ளைகளாகயிருந்தோம். நம்முடைய புதிய ஜீவியத்தில் நாம் வெளிச்சத்தின் பிள்ளைகளாகயிருக்கிறோம்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நம்மை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவடையவேண்டும். நாம் அறியாமையிலிருந்த காலத்திலேயே, தேவன் நம்மை தம்முடைய சாயலுக்கு ஒப்பாய் சிருஷ்டித்திருக்கிறார். இது தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற மிகப்பெரிய ஆசீர்வாதம். நாம் தேவசாயலில் இன்னும் வளர்ச்சியடைவேண்டும். தேவனுடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவடையவேண்டும். நம்முடைய சிந்தையும் செயலும் புதிதாக்கப்படவேண்டும். நாம் பழைய மனுஷனை களைந்துபோட்டு, புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளவேண்டும். அப்போது தேவனுடைய சாயலுக்கு ஒப்பாய் பூரண அறிவுடையவர்களாயிருப்போம்.

கர்த்தருக்குள் புது சிருஷ்டியாயிருக்கிறவர்கள் எல்லோரும் கர்த்தருடைய சமுகத்தில் சமஅந்தஸ்துள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக "கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை புறஜாதியானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை" (கொலோ 3:11). கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாகயிருக்கிறார். நாம் ஒவ்வொருவரும் பரிசுத்தமாயிருக்க வேண்டும். நம் எல்லோருக்குமே தேவனுடைய கிருபையைப் பெற்றுக்கொள்கிற சிலாக்கியம் கிடைத்திருக்கிறது. கிறிஸ்துவே நம் எல்லாரிலும் எல்லாமுமாக இருக்கிறார். நம் எல்லோருக்கும் கிறிஸ்துவே நம்பிக்கையாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறார்.

அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்
கொலோ 3 : 12-17

கொலோ 3:12. ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;

கொலோ 3:13. ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.

கொலோ 3:14. இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.

கொலோ 3:15. தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப் பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள்.

கொலோ 3:16. கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனை களினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி;

கொலோ 3:17. வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்.

நாம் தேவனுடைய உருக்கமான இரக்கத்தையும் தயவையும் தரித்துக்கொள்ளவேண்டும். கோபத்தையும், மூர்க்கத்தையும், பொறாமையையும் நம்மைவிட்டு களைந்து போட்டால் மாத்திரம் போதாது (கொலோ 3:9). நாம் உருக்கமான இரக்கத்தையும், தயவையும் தரித்துக்கொள்ளவேண்டும்.

நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாயிருக்கிறோம். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அவருக்குப் பிரியமானவர்களாக இருக்கிறார்கள். தேவனுக்குப் பிரியமானவர்கள் தேவன் பிரியப்படுகிற பிரகாரம் ஜீவிக்கவேண்டும். நம்முடைய ஜீவியத்தில் பரிசுத்தம் இருக்க வேண்டும். அசுத்தமானதை களைந்து போடவேண்டும். சுத்தமானதைத் தரித்துக் கொள்ளவேண்டும். நாம் என்னென்ன சுபாவங்களையெல்லாம் தரித்துக்கொள்ள வேண்டுமென்று, அப்போஸ்தலர் பவுல் ஒவ்வொன்றாகச் சொல்லுகிறார்.

துன்பப்படுகிறவர்கள்மீது நாம் உருக்கமான இரக்கம் காண்பிக்க வேண்டும். இரக்கம் செய்கிறவர்கள் இரக்கம் பெறுவார்கள். நமக்கு தேவனுடைய இரக்கம் வேண்டுமென்றால் நாமும் மனுஷர்மீது உருக்கமான இரக்கத்தைக் காண்பிக்கவேண்டும். நம்மிடத்தில் தயவு காணப்படவேண்டும். மனுஷருடைய மனதையும் இருதயத்தையும் மென்மையாக்குவது சுவிசேஷத்தின் திட்டம். இது மாத்திரமல்ல, மனுஷனுடைய மனதை சுவிசேஷம் இனிமையாக்குகிறது. மனுஷர் மத்தியிலே அன்பையும், சந்தோஷத்தையும், தயவையும் அதிகரிக்கச் செய்கிறது. தேவனோடு நம்மை ஒப்புரவாக்குகிறது. கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே தயவைத் தரித்துக்கொள்ளவேண்டும்.

நம்மிடத்தில் மனத்தாழ்மை காணப்படவேண்டும். வெளிப்பார்வைக்கு தாழ்மையாயிருந்தால் போதாது. நமக்கு மேலான அதிகாரிகளுக்கு நம்மைத் தாழ்த்தினால் போதாது. நம்முடைய சரீரத்தைத் தாழ்த்தினால்போதாது. நம்முடைய மனமும் தாழ்மையுள்ள தாயிருக்கவேண்டும். நம்மிடத்தில் சாந்தம் நிரம்பியிருக்க வேண்டும். நம்முடைய கோபத்தையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டும். மற்றவர் நம்மீது கோபப்படும் போது, நாம் அவர்களுடைய கோபத்தை பொறுமையாய்ச் சகித்துக்கொள்ளவேண்டும்.

கர்த்தருடைய பிள்ளை களெல்லோருமே நீடிய பொறுமையுள்ளவராயிருக்க வேண்டும். ஒரு சிலரிடத்தில் கொஞ்சம் பொறுமையிருக்கும். தங்களுக்கு விரோதமாக யாராவது தீங்குசெய்தால் கொஞ்ச நேரம் பொறுமையாயிருப்பார்கள். அதன்பின்பு பொறுமையிழந்து கோபத்தோடு பேச ஆரம்பித்துவிடுவார்கள். இவர்களால் நீடியபொறுமையோடிருக்க முடியாது. தேவன் நம்மீது நீடிய பொறுமையோடிருக்கிறார். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய சுபாவத்தைத் தரித்துக்கொள்ளவேண்டும். நாமும் மற்றவர்மீது நீடிய பொறுமையோடிருக்கவேண்டும்.

விசுவாசிகள் ஒருவரையொருவர் தாங்கவேண்டும். நம் எல்லோருக்குமே உதவியும் ஆதரவும் தேவைப்படுகிறது. இந்த உலகத்தில் தனிமனிதனாக நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. நாம் ஒருவருக்கொருவர் உதவியாகயிருக்க வேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் தாங்கவேண்டும். நாம் மற்றவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். மற்றவர்கள் நமக்கு நன்மை செய்யும்போது அதை நன்றியுள்ள இருதயத்தோடு ஏற்றுக்கொள்ளவேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் மற்ற விசுவாசிகளை மன்னிக்கவேண்டும். ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து நமக்கு மன்னித்ததுபோல, நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும் (கொலோ 3:13). தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் மத்தியில் சில சமயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். வாக்குவாதங்கள் உண்டாகலாம். நாம் பரிசுத்தராகவே இருக்கிறோம். தேவனுக்குப் பிரியமானவராயிருக்கிறோம். ஆனாலும் சில சமயங்களில் நமக்குள் வாக்குவாதங்களும், சண்டைகளும் உண்டாகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் கர்த்தருடைய பரிசுத்தவான்களாகிய நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும்.

கிறிஸ்து நமக்கு மன்னித்திருக்கிறார். நாம் பாவிகளாகயிருக்கையிலேயே, அவர் நமக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்தார். கிறிஸ்து நமக்கு மன்னித்ததுபோல நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும். கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை நாம் பின்பற்ற வேண்டியவர்கள். ஒருவருக்கொருவர் மன்னியாமல் கர்த்தருடைய அடிச்சுவடுகளை நம்மால் ஒருபோதும் பின்பற்ற முடியாது.

உருக்கமான இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், நீடியபொறுமை ஆகியவையெல்லாம் கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் தரித்துக்கொள்ள வேண்டிய நல்ல சுபாவங்கள். இவையெல்லாவற்றின் மேலும், நாம் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளவேண்டும் (கொலோ 3:14). நம்முடைய விசுவாசத்திற்கு அன்பே அஸ்திபாரமாகயிருக்கிறது. நம்முடைய நற்குணத்திற்கு அன்பே சிகரமாகயிருக்கிறது. நம்முடைய அன்பு பூரண சற்குணத்தின் கட்டாகயிருக்கிறது. விசுவாசிகள் ஒற்றுமையாயிருக்க வேண்டுமென்றால், நாம் ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். ஒருவரையொருவர் தாங்கவேண்டும். ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும்.

தேவசமாதானம் நம்முடைய இருதயங்களை ஆளுகை செய்வதற்கு நாம் ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய இருதயத்தை தேவன் ஆட்கொள்ளவேண்டும். அவரே நம்மை ஆளுகை செய்யவேண்டும். நாம் என்ன செய்யவேண்டுமென்பதையும், என்ன செய்யக்கூடாது என்பதையும் கர்த்தரே நமக்காகத் தீர்மானம் செய்யவேண்டும். கர்த்தருடைய தீர்மானத்திற்கு நாம் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளாகிய நம்மை ஒரே சரீரமாக அழைத்திருக்கிறார். ஒரே சரீரமாக நாம் இருக்கும்போது, நாம் ஒருவருக்கொருவர் சமாதானத்தோடிருக்க வேண்டும். சரீரத்தின் ஒவ்வொரு அவயவமும் ஒன்றுக்கொன்று இசைந்து செயல்படவேண்டும்.

நாம் ஒரே சரீரமாக இணைக்கப்படும்போது, நமக்குள் தேவசமாதானம் நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தை தேவசமாதானம் ஆளுகை செய்யவேண்டும். நாம் நன்றியறிதல் உள்ளவர்களாக இருக்க வேண்டும். நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கும்போது நம்முடைய இருதயம் பரிசுத்தமாகும். நம்முடைய சிந்தையிலும் செயலிலும் பரிசுத்தமிருக்கும். நமக்குள் சமாதானம் நிரம்பியிருக்கும். நாம் மற்றவர்களுக்கும் ஆசீர்வாதமாயிருப்போம். மற்ற விசுவாசிகளோடு சமாதானமாகயிருப் போம் ஒருவரையொருவர் தாங்கி, ஒருவருக் கொருவர் மன்னித்துக் கொள்வோம். நம்முடைய இருதயத்தில் ஆவியின்கனி பிறக்கவேண்டுமென்றால், கர்த்தரைத் துதிக்கிற சுபாவம் நமக்குள் பெருகியிருக்கவேண்டும் (கொலோ 3:15).

கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் வசனம் நமக்கு ஒரு வேலைக்காரரைப்போல இருக்கக்கூடாது. அது நம்மை ஆளுகை செய்கிற எஜமானாக இருக்கவேண்டும். ஒரு எஜமான் தன் வீட்டில் வாசம்பண்ணுவதுபோல, கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாய் வாசம்பண்ணவேண்டும். நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் கிறிஸ்துவின் வசனம் நம்மை வழிநடத்தவேண்டும்.

நமக்குள்ளே கிறிஸ்துவின் வசனம் அரைகுறையாக இருக்கக்கூடாது. அது பரிபூரணமாயிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்திற்குள் கிறிஸ்துவின் வசனம் நிரம்பியிருக்கும்போது, அது நம்முடைய இருதயத்தைச் சுத்திகரிக்கும். நம்முடைய சிந்தைகளையும், பேச்சுக்களையும், கிரியைகளையும் பரிசுத்தப்படுத்தும்.

கிறிஸ்துவின் வசனம் நமக்குள் பரிபூரணமாய் நிரம்பியிருக்கும்போது நம்முடைய ஆத்துமா செழிக்கும். கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடு வாசமாயிருக்கவேண்டும். கிறிஸ்துவின் வசனத்தைக் குறித்து நமக்குள்ளே சந்தேகம் இருக்கக்கூடாது. வசனத்தைப்பற்றி நாம் வாக்குவாதம்பண்ணக்கூடாது. அது சகல ஞானத்தோடும் நமக்குள் வாசமாயிருக்கவேண்டும்.

கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே பூரணமாய்க் கிரியை செய்ய நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும். அப்போது வசனம் நமக்குள் கிரியை நடப்பிக்கும். நம்முடைய ஜீவியம் புதுசிருஷ்டியாக மாறும். நமக்குள்ளிருந்து ஆவியின் கனி வெளிப்படும். நம்முடைய ஜீவியம் கர்த்தரைப் பிரியப்படுத்தும். நம்முடைய சிந்தனையும், பேச்சும், கிரியையும் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாகயிருக்கும்.

நாம் ஒருவருக்கொருவர் போதித்துப் புத்திசொல்லிக் கொள்ளவேண்டும். ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொள்வதினால் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியம் நேர்த்தியாய் வளர்ச்சி பெறும். சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப் பாட்டுகளினாலும் நாம் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லிக்கொள்ள வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு தேவையான சத்தான போஜனம் சங்கீதங்களிலும், ஞானப்பாட்டுகளிலும், கீர்த்தனைகளிலும் நிரம்பியிருக்கிறது. மற்றவருக்குப் போதித்துப் புத்திசொல்ல நாம் ஆயத்தமாயிருக்கவேண்டும். மற்றவர் நமக்குப் புத்திசொல்லும்போது அதை கேட்பதற்கும் நம்மைப் பக்குவப்படுத்திக்கொள்ளவேண்டும்.

நாம் சங்கீதங்களைப் பாடும்போது, அதிலுள்ள வார்த்தைகளை நம்முடைய இருதயத்தில் உணர்ந்து பாடவேண்டும். நம்முடைய ராகம் எப்படிப்பட்டது என்பது முக்கியமல்ல. நன்றியுள்ள இருதயத்தோடு, வார்த்தைகளை உணர்ந்து நாம் பாடுகிறோமா என்பதே முக்கியம். அப்போதுதான் நம்மால் நமக்கு போதித்து புத்திசொல்ல முடியும். நம்மால் மற்றவர்களுக்கும் போதித்து புத்திசொல்ல முடியும். நம்முடைய இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன் பாடவேண்டும்.

நாம் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லுவதை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்ய வேண்டும் " வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம், கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரியுங்கள்" (கொலோ 3:17). நாம் எதை செய்தாலும் இயேசுவின் நாமத்தினாலே செய்யும்போது, நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் பிதாவாகிய தேவனையும் ஸ்தோத்திரிக்கிற துதியும் ஸ்தோத்திரமும் நம்முடைய இருதயத்தில் நிரம்பியிருக்கும்.

மனைவிகளே, புருஷர்களே
கொலோ 3 : 18,19

கொலோ 3:18. மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள்.

கொலோ 3:19. புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள்.

சுவிசேஷத்தின் மூலமாய் நமக்கு ஏராளமான ஆசீர்வாதங்களும் சிலாக்கியங்களும் வருகிறது. அதே வேளையில் நமக்கு சில கடமைகளும் கொடுக்கப் பட்டிருக்கிறது. சிலாக்கியங்களையும் கடமைகளையும் நாம் வேறுபிரிக்கக்கூடாது. நமக்கு சிலாக்கியம் இருப்பதினால் நமக்கு எந்தக் கடமையும் இல்லையென்று அசட்டையாயிருக்கக் கூடாது.

குடும்பத்திலே மனைவிகளுக்கும், புருஷர்களுக்கும் கடமைகள் உண்டு. மனைவிகள் கர்த்தருக்கேற்கும்படி தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியவேண்டும். மனைவிகள் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, தங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியவேண்டும் (எபே 5:22). சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறதுபோல, மனைவிகளும் தங்கள் சொந்த புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் (எபே 5:24). கீழ்ப்படிதல் மனைவியின் கடமை. தேவனுடைய சித்தத்தின் பிரகாரம் இந்தக் கீழ்ப்படிதல் நியமிக்கப்பட்டிருக்கிறது. இயற்கையின் பிரகாரமாக இந்தக் கீழ்ப்படிதலை நாம் அங்கீகரிக்கலாம்.

மனைவி தன்னுடைய சொந்தப் புருஷனுக்குக் கீழ்ப்படியவேண்டும். மனைவிக்கு அவளுடைய புருஷனே, மிகவும் நெருக்கமாக உறவில் இருக்கிறார். இது கர்த்தருக்குப் பிரியமாயிருக்கிறது. புருஷர்களும் தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும். அவர்கள்மேல் கசந்துகொள்ளக்கூடாது. புருஷன் தன் மனைவியின்மீது அன்போடு பழகவேண்டும். உண்மையான அன்பையும் பாசத்தையும் காண்பிக்கவேண்டும். கிறிஸ்துவானவர் சபையை நேசிப்பதுபோல புருஷனும் தன் மனைவியை நேசிக்கவேண்டும். கணவன் மனைவிக்கு இடையில் ஒருவருக்கொருவர் கசப்பு இருக்கக்கூடாது. ஒருவர்மீது ஒருவர் அன்புகூரவேண்டும். மனைவிகள் தங்கள் புருஷருக்கு எல்லா விஷயத்திலும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்.

பிள்ளைகளே, பிதாக்களே
கொலோ 3 : 20,21

கொலோ 3:20. பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது.

கொலோ 3:21. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.

நம்முடைய குடும்பத்தில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் விசேஷமான கடமைகள் உள்ளது. பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு எல்லா காரியத்திலும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். இதுவே கர்த்தருக்குப் பிரியமானது. பெற்றோருக்கு தங்கள் பிள்ளைகளின்மீது உரிமையும் அதிகாரமுமுள்ளது. பெற்றோர் தங்களுக்கு நியாயமாய்க் கட்டளையிடுகிற எல்லா கட்டளைகளுக்கும் பிள்ளைகள் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். பிள்ளைகள் பெற்றோருக்குக் கீழ்ப்படிவது பிள்ளைகளின் கடமை. பிள்ளைகளிடத்தில் கீழ்ப்படிதலை எதிர்பார்ப்பது பெற்றோரின் உரிமை. பிள்ளைகளின் கீழ்ப்படிதல் கர்த்தருக்கும் பிரியமாயிருக்கிறது.

பெற்றோரும் தங்கள் பிள்ளைகள்மீது அன்பாயிருக்கவேண்டும். அவர்களுக்கு கோபமூட்டக்கூடாது. பிள்ளைகளை அதிகமாய் கோபமூட்டினால் அவர்கள் திடனற்றுப்போவார்கள். பெற்றோருக்கு பிள்ளைகள்மீது அதிகாரமுண்டு. ஆனால் அந்த அதிகாரத்தை கொடூரமாக பயன்படுத்தக்கூடாது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்போடும், கரிசனையோடும், பாசத்தோடும் பழகவேண்டும். அவர்கள்மீது அன்போடும் கரிசனையோடும் அதிகாரம் செலுத்தவேண்டும். பிள்ளைகள்மீது எப்போதும் எரிந்து விழக்கூடாது. எப்போதும் கோபமான வார்த்தைகளைப் பேசக்கூடாது. பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடத்தில் அன்புகூரவேண்டும். அதே வேளையில் தங்கள் பிள்ளைகளை அவர்கள் ஒழுக்கமாகவும் வளர்க்கவேண்டும்.

வேலைக்காரரரே
கொலோ 3 : 22-25

கொலோ 3:22. வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக் கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப் பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ் செய்யுங்கள்.

கொலோ 3:23. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்திரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து,

கொலோ 3:24. எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.

கொலோ 3:25. அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை.

வேலைக்காரர் சரீரத்தின்படி தங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லா காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். தங்களுக்குக் கொடுக்கப்படுகிற எல்லா வேலையையும் மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும். எஜமான் தங்களைப் பார்க்கும்போது கடினமாய் உழைப்பதுபோல நடித்துவிட்டு, எஜமான் தங்களைவிட்டுப்போனபின்பு அவரை ஏமாற்றக்கூடாது. ஏமாற்றுகிறவர்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க ஊழியம் செய்கிறவர்கள். இவர்கள் பார்வைக்கு ஊழியம் செய்கிறார்கள். இவர்களிடத்தில் தேவனுக்குப் பயப்படுகிற பயமில்லை. இப்படிப்பட்டவர்களுடைய இருதயம் கபடமுள்ளது.

உண்மையான வேலைக்காரர் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியம் செய்யவேண்டும். மனுஷருக்குப் பிரிமாயிருக்கவேண்டுமென்று பார்வைக்கு ஊழியம் செய்யக்கூடாது. வேலைக்காரர் எல்லா காரியத்திலேயும் தங்கள் எஜமான்களுக்கு கீழ்ப்படிந்து ஊழியம் செய்யவேண்டும்.

நம்முடைய இருதயத்தில் தேவனுக்குப் பயப்படுகிற பயம் நிரம்பியிருக்கவேண்டும். நம்முடைய இருதயத்தை இந்த பயமே ஆளுகை செய்யவேண்டும். தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் தங்களுடைய வேலைகளை ஒழுங்காய்ச் செய்வார்கள். தங்களிடத்தில் குற்றமில்லாமல் பார்த்துக் கொள்வார்கள். வேலைக்காரரிடத்தில் தேவனுக்குப் பயப்படுகிற பயமிருக்கும்போது, அவர் கபடமில்லாத இருதயத்தோடு ஊழியம் செய்தவர். வேலை செய்யாமல் சும்மாயிருக்கமாட்டார். யாரையும் ஏமாற்றமாட்டார்.

BELLWETHER INTERNATIONAL

கொலோசெயர் - விரிவுரை

COLOSSIANS - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

வேலைக்காரர் எதை செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும் (கொலோ 3:24). நம்முடைய வேலை மனுஷருக்கென்று செய்யப்படாமல், தேவனுக்கென்று செய்யப்படும்போது, கர்த்தர் அந்த வேலையை ஆசீர்வதிக்கிறார். அதைப் பரிசுத்தப்படுத்துகிறார். நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற வேலைகளை நாம் கபடமில்லாத இருதயத்தோடு செய்யும்போது, நாம் மனுஷருக்கென்று அதைச் செய்யாமல், கர்த்தருக்கென்றே அதை மனப்பூர்வமாய்ச் செய்கிறோம். உண்மையுள்ள ஊழியக்காரர் பரலோகத்திற்கு சமீபமாயிருக்கிறார்.

நாம் கர்த்தராகிய கிறிஸ்துவை சேவிக்கிறவர்கள். அதினாலே சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவோம் (கொலோ 3:23). தேவனுடைய கட்டளையின் பிரகாரம் நாம் நம்முடைய எஜமான்களுக்கு ஊழியம் செய்யவேண்டும். அப்படி செய்கிறவர்கள் மனுஷருக்கு ஊழியம் செய்யாமல், கர்த்தருக்கென்று ஊழியம் செய்கிறார்கள். இவர்கள் சுதந்தரமாகிய பலனை கர்த்தராலே பெறுவார்கள். நாம் வேலைக்காரராகயிருந்தாலும், கர்த்தர் நமக்கு சுதந்தரமாகிய பலனைக் கொடுப்பார். நமக்கு புத்திரசுவிகாரத்தின் ஆசீர்வாதத்தைக் கொடுப்பார். நாம் ஒரு எஜமானுக்கு வேலைக்காரராகயிருந்தாலும், கர்த்தருடைய சமுகத்தில் அவருடைய பிள்ளைகளாகயிருக்கிறோம். நம்முடைய கர்த்தரை "அப்பா பிதாவே" என்று அழைக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம்.

கர்த்தருடைய சமுகத்தில் பட்சபாதமே இல்லை. தேவனே நம்முடைய நியாயாதிபதி. நம்மை நியாயந்தீர்க்கிறவர் நீதியுள்ளவர். அவர் பட்சபாதமில்லாமல் நன்மை செய்கிறவனுக்கு நன்மையான பலன்களையும், அநியாயம் செய்கிறவர்களுக்கு தண்டனையையும் கொடுப்பார். "அநியாயஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை" (கொலோ 3:25). வேலைக்காரருக்கும், எஜமானுக்கும் கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதியாகயிருக்கிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் வேலைக்காரரும், எஜமான்களும் நடந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய திட்டத்திற்குக் கீழ்ப்படியும்போது இந்த உலகத்தில் சம்பூரணமான ஆசீர்வாதம் பெருகியிருக்கும்.

4 அதிகாரம்

அப்போஸ்தலர் பவுல் எஜமான்களின் கடமைகளை விரிவாக எடுத்துச் சொல்லுகிறார் (கொலோ 4:1). நாம் இடைவிடாமல் ஜெபம்பண்ண வேண்டும். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்க வேண்டும் (கொலோ 4:2-4). நம்முடைய வசனம் கிருபை நிறைந்ததாக இருக்கவேண்டும். பிறரோடு அன்பான வார்த்தைகளைப் பேசவேண்டும் (கொலோ 4:5,6). அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தில் தன்னுடைய சிநேகிதர் அநேகரைப்பற்றி எழுதுகிறார் (கொலோ 4:7-18).

எஜமான்களே
கொலோ 4:1

கொலோ 4:1. எஜமான்களே, உங்களுக்கும் பரலோகத்தில் எஜமான் இருக்கிறரென்று அறிந்து, வேலைக்காரருக்கு நீதியும் செவ்வாயுமானதைச் செய்யுங்கள்.

எஜமான்கள் தங்கள் வேலைக்காரருக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகளை அப்போஸ்தலர் பவுல் தெளிவு படுத்துகிறார். அவர்கள் தங்கள் வேலைக் காரருக்கு நீதியும் செம்மையுமானதைச் செய்யவேண்டும். நீதி செய்யும்போது அதை கடினமாக நிறைவேற்றக்கூடாது. அன்போடு நீதி செய்யவேண்டும்.

வேலைக்காரர்களுக்கு எஜமான்கள் முதலாளிகளாகயிருந்தாலும், அந்த எஜமான்களுக்கும் எஜமான் பரலோகத்திலிருக்கிறார். இப்பிரபஞ்சத்தில் எஜமான்கள் வேலைக்காரருக்கு முதலாளியாகயிருக்கிறார்கள். ஆனாலும் பரலோகத்திலிருக்கிற எஜமானுக்கு, இந்தப் பூமியிலிருக்கிற எஜமான்கள் கணக்கு ஒப்புவிக்கவேண்டும். நம்முடைய பரலோகத்தின் எஜமான் நமக்கு என்ன செய்யவேண்டும் என்று விரும்புகிறோமோ, அதை இங்குள்ள வேலைக்காரருக்கு மனப்பூர்வமாய்ச் செய்யவேண்டும். இப்பூமியிலுள்ள எஜமான்களுக்கும், இங்குள்ள வேலைக்காரருக்கும், பரலோகத்திலுள்ள நம்முடைய கர்த்தர் எஜமானாகயிருக்கிறார். நியாயத்தீர்ப்பு நாளின்போது, வேலைக்காரரைப்போலவே எஜமான்களும், பரலோகத்திலுள்ள எஜமானாகிய கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும். பூமிக்குரிய எஜமான்கள் தங்கள் வேலையாட்களுக்கு எஜமான்களாகயிருந்தாலும், பர லோகத்திலுள்ள எஜமானுக்கு வேலைக்காரராகவே இருக்கிறார்கள்.

ஜெபம்பண்ணுங்கள்
கொலோ 4 : 2-4

கொலோ 4:2. இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்.

கொலோ 4:3. கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப் பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக் குறித்துப் பேச வேண்டியபிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு,

கொலோ 4:4. திருவசனம் செல்லும் படியான வாசலை தேவன் திறந்தருளும் படி எங்களுக்காகவும் வேண்டிக் கொள்ளுங்கள்.

அப்போஸ்தலர் பவுல் ஒவ்வொருவருடைய கடமையையும் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டு, கடைசியில் விசுவாசிகளுடைய கடமையையும் சொல்லுகிறார். எல்லா விசுவாசிகளும் இடைவிடாமல் ஜெபம் பண்ணவேண்டும். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்கவேண்டும் (கொலோ 4:1) கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் ஜெபம் பண்ணுவதற்கு நமக்குக் கிடைக்கிற எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எப்போதும் ஜெப சிந்தனையிலிருக்க வேண்டும். நம்முடைய மனம் புதிதாக்கப்பட்டிருக்கவேண்டும். மறுரூபமடைந்திருக்க வேண்டும். ஜெபிப்பது நம்முடைய கடமை என்னும் சிந்தனையோடு நம்முடைய மனம் ஜீவனுள்ளதாயிருக்கவேண்டும்.

நாம் ஜெபிக்கும்போது கர்த்தரைத் துதிக்கவேண்டும். ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருக்கவேண்டும். நம்முடைய ஒவ்வொரு ஜெபத்திலும் கர்த்தரை ஸ்தோத்திரம்பண்ணுவது முக்கிய இடம்பெற்றிருக்கவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளிடம், "எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள்" (கொலோ 4:4) என்று கேட்டுக்கொள்கிறார். விசுவாசிகள் தங்களுடைய ஊழியக்காரருக்காக விசேஷித்த ஜெபங்களை ஏறெடுக்க வேண்டும். தேவனுடைய கிருபாசனத்திற்கு முன்பாக, விசுவாசிகள் தங்களுடைய ஊழியக்காரருக்காக பரிந்துபேசவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் விசுவாசிகளுக்கு ஆலோசனை சொல்லும்போது, "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்" (கொலோ 4:2) என்று சொல்லுகிறார். விசுவாசிகள் தங்களுக்காக ஜெபிக்கும்போது, அவர்கள் "ஊழியக்காரருக்காகவும் ஜெபிக்க வேண்டும்".

திருவசனம் செல்லும்படியான வாசலை தேவன் ஊழியக்காரருக்கு திறந்தருளும்படியாக அவர்கள் ஜெபிக்க வேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணுவதற்கு வாய்ப்புக்கள் உண்டாக வேண்டும். வாய்ப்பு கிடைக்கும் போது சுவிசேஷத்தை தைரியமாய்ப் பேச கர்த்தர் தாமே கிருபை தரவேண்டும்.

அப்போஸ்தலர் பவுல் கிறிஸ்துவினுடைய இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிறார். அந்த இரகசியத்தைக் குறித்து அவர் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேச வேண்டும். பவுல் அந்த இரகசியத்தை வெளிப்படுத்த வேண்டும். இதற்கான வாய்ப்பு பவுலுக்கு கிடைக்கவேண்டும். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது பவுலுக்கு பல பிரச்சனைகளும் பாடுகளும் உண்டாயிற்று. வேதனைகளும் உபத்திரவங்களும் உண்டாயிற்று. இவற்றினிமித்தமாக பவுல் சோர்ந்து போய்விடக்கூடாது. பாடுகள் அதிகரிப்பதினால் பவுல் தன் ஊழியத்தையே நிறுத்திவிடக்கூடாது.

சுவிசேஷத்தைப் பேசவேண்டிய பிரகாரமாய்ப் பேசுவதற்கு தேவனுடைய அநுக்கிரகம் தேவைப்படுகிறது. கர்த்தருடைய பிள்ளைகள் தனக்காக ஜெபம்பண்ணும்போது, தேவன் தனக்கு கிருபை கொடுப்பார் என்று பவுல் விசுவாசிக்கிறார். பவுல் விசுவாசிகளுக்காக ஜெபிக்கிறார். அதே சமயத்தில் அந்த விசுவாசிகளும் தனக்காக ஜெபிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

அப்போஸ்தலர் பவுல் தனக்காக ஜெபிக்குமாறு விசுவாசிகளிடத்தில் கேட்டுக்கொள்கிறார். குறிப்பாக எந்த காரியத்திற்காக அவர்கள் ஜெபிக்கவேண்டும் என்பதையும் சொல்லுகிறார். பவுலுக்கு எப்படி பேசவேண்டுமென்று தெரியும். பவுலுக்கு மாத்திரமல்ல எல்லா விசுவாசிகளுக்கும், எல்லா ஊழியக்காரர்களுக்கும் எப்படி பேசவேண்டும் என்பது தெரியும். ஆனாலும் தான் பேசவேண்டிய பிரகாரமாய் பேசுவதற்கு, தேவன் தனக்கு கிருபை அளிக்கவேண்டுமாறு, விசுவாசிகள் தனக்காக ஜெபிக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். விசுவாசிகள் பவுலுக்காக ஜெபிக்கும்போது, கர்த்தர் தாமே எப்படி பேசவேண்டுமென்று பவுலுக்குக் கற்றுக்கொடுப்பார்.

கிருபை பொருந்தின வசனம் கொலோ 4 : 5,6

கொலோ 4:5. புறம்பேயிருக்கிறவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்து, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

கொலோ 4:6. அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக.

புறஜாதியாரும் அவிசுவாசிகளும் சபைக்குப் புறம்பே இருக்கிறார்கள். இவர்கள் தேவனுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் இப்பிரபஞ்சத்தில் ஜீவிக்கிற வரையிலும், புறஜாதி ஜனங்கள் மத்தியில் ஜீவிக்கிறோம். நாம் இவர்களுக்கு முன்பாக ஞானமாய் நடந்துகொள்ளவேண்டும். காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். கர்த்தருடைய சமுகத்தில் அவர்களும் வரவேண்டும். அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கு நாம் ஒருபோதும் இடையூறாக இருக்கக்கூடாது.

புறஜாதி ஜனங்களோடு பேசும்போது நாம் மிகுந்த கவனமாகவும், ஞானமாகவும் பேசவேண்டும். நம்முடைய வார்த்தைகளினால் அவர்களுடைய மனதைப் புண்படுத்தக்கூடாது. தேவையில்லாத விவாதங்களைப் பேசி, அவர்கள் சுவிசேஷத்தைக் கேட்பதற்கு நாம் தடையாயிருக்கக்கூடாது. சுவிசேஷத்தை ஜெபத்தோடு சொல்லும்போது நல்ல பலன் கிடைக்கும். தேவையில்லாமல் விவாதம்பண்ணினால், புறஜாதியார் தங்கள் மார்க்கத்தைப் இறுகப்பற்றிக் கொள்வார்கள். சுவிசேஷத்திற்கு சத்துருக்களாகி விடுவார்கள்.

புறம்பே இருக்கிறவர்களுக்கு நம்மால் செய்ய முடிகிற எல்லா உதவிகளையும் செய்யவேண்டும். நம்முடைய வார்த்தை கிருபை நிறைந்ததாயிருக்கவேண்டும். நாம் அவர்களுக்கு நற்கிரியைகளைச் செய்யவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள வேண்டும். நமக்குக் கிடைக்கிற ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, அவர்களுக்கு நன்மை செய்யவேண்டும். அவர்களுக்கு நன்மை செய்ய வாய்ப்புக்களை தேடிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயிருக்கவேண்டும். அது உப்பால் சாரமேறினதாயும் இருக்கவேண்டும். நம்முடைய வார்த்தையில் கிருபையும், கரிசனையும், அன்பும் மிகுந்திருக்கவேண்டும். கிறிஸ்துவின் சுபாவம் நம்முடைய வார்த்தையில் வெளிப்படவேண்டும். ஒரு விசுவாசி எப்படி பேசவேண்டுமோ அப்படித்தான் பேசவேண்டும். உலகப்பிரகாரமான ஜனங்களைப்போல நாம் பேசக்கூடாது. வீண் வார்த்தைகளைப் பேசக்கூடாது. பக்திவிருத்திக்கேதுவான வார்த்தைகளை மாத்திரம் பேசவேண்டும்.

நம்முடைய வசனம் உப்பால் சாரமேறினதாக இருக்கவேண்டும். தேவனுடைய கிருபையே நம்முடைய வசனத்தை உப்பால் சாரமேற்றுகிறது. போஜனத்தில் உப்பு சேர்க்கும்போது அது போஜனத்தைக் கெட்டுப்போகாமல் பாதுகாக்கும். நம்முடைய பேச்சும் விசுவாசிகளை கெட்டுப்போகாமல் பாதுகாக்கவேண்டும். அவர்களுடைய ஆத்துமா அழிந்துபோகாதவாறு அவர்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தவேண்டும்.

ஒவ்வொருவனுக்கும் இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நாம் அறிந்திருக்கவேண்டும். இதற்கு நமக்கு தெய்வீக ஞானமும், தெய்வீக கிருபையும் தேவை. எல்லோருக்கும் ஒன்றுபோல் உத்தரவு சொல்லமுடியாது. ஒவ்வொருவருக்கும் ஏற்ற பிரகாரம் உத்தரவு சொன்னால்தான் அவர்களுக்குப் புரியும். நாம் சொல்லுகிற உத்தரவு அவர்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நாம் சொல்லவேண்டிய உத்தரவை மாத்திரம் சொல்லவேண்டும். தேவையில்லாமல் அதிகமாக வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. நம்முடைய விசுவாசத்தைக்குறித்து புறஜாதியார் கேள்வி கேட்கும்போது, நம்முடைய விசுவாசத்தை அவர்களுக்கு பக்குவமாக எடுத்துச் சொல்ல தெரியவேண்டும். அவர்கள் கேட்கிற கேள்விகளுக்கு நேர்த்தியான பதிலைச் சொல்ல அறிந்திருக்கவேண்டும்.

தீகிக்கு
கொலோ 4 : 7,8

கொலோ 4:7. பிரியமான சகோதரனும், உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன் வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்.

கொலோ 4:8. உங்கள் செய்திகளை அறியவும், உங்கள் இருதயங்களைத் தேற்றவும்,

அப்போஸ்தலர் பவுல் இந்த நிருபத்தை தீகிக்கு மூலமாய் கொலோசெயருக்கு கொடுத்து அனுப்புகிறார். பவுலிடமிருந்து நிருபத்தைப் பெற்றுக்கொள்ள கொலோசெயர் ஆவலாய்க் காத்திருக்கிறார்கள். பவுலைப்பற்றிய செய்திகளைக் கேள்விப்படும்போது அவர்கள் மிகுந்த சந்தோஷமடைவார்கள். பவுல் தீகிக்கு மூலமாய் தன் செய்திகளையெல்லாம் அவர்களுக்கு இந்த நிருபத்தின் மூலமாய் எழுதி அனுப்புகிறார். சபையார் ஊழியக்காரரைக் குறித்து கரிசனையோடிருக்க வேண்டும். அவர்களுடைய நன்மைகளை விசாரிக்கவேண்டும்.

தீகிக்கு பிரியமான சகோதரனாகவும், உண்மையுள்ள ஊழியக்காரனாகவும் இருக்கிறார். உண்மையுள்ளவர்களிடத்தில் உண்மையான அன்பும் பிரியமும் இருக்கும். அப்படிப்பட்டவர்களிடத்தில் நாமும் அன்புகூருவோம். நம்முடைய அன்புக்கும் கரிசனைக்கும் அவர்கள் பாத்திரவான்களாயிருப்பார்கள்.

தீகிக்கு கர்த்தருக்குள் பவுலுக்கு உடன்வேலையாளாயிருக்கிறார். சுவிசேஷ ஊழியம் செய்கிற ஊழியக்காரர்கள், ஒருவருக்கொருவர் அன்புகூரவேண்டும். இந்த அன்பு சுவிசேஷ ஊழியத்தைப் பலப்படுத்தும். ஊழியக்காரர் ஒருவருக்கொருவர் அன்பாயிருக்கும்போது, அவர்கள் செய்கிற ஊழியமும் நேர்த்தியாயிருக்கும்.

கொலோசெயருடைய செய்திகளை அறியவும், அவர்களுடைய இருதயங்களைத் தேற்றவும், அப்போஸ்தலர் பவுல் தீகிக்குவை அவர்களிடத்தில் அனுப்புகிறார். தன்னைப்பற்றிய செய்திகளை கொலோசெயர் அறிந்துகொள்வதில் ஆர்வமாயிருக்கிறார்கள். அதுபோலவே அவர்களைப்பற்றிய செய்தியை அறிவதற்கு தீகிக்குவும் ஆர்வமாயிருக்கிறார். விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஆதரவாயிருக்கவேண்டும். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும். ஒருவருக்கொருவர் கரிசனையோடிருக்க வேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாமெல்லோருமே, தேவனுடைய குடும்பத்தில் பிள்ளைகளாகயிருக்கிறோம். நாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நமக்குள் பிரிவினைகளும், கருத்து வேறுபாடுகளும், போட்டி பொறாமைகளும் இருக்கக்கூடாது. நமக்குள் அன்பும், சமாதானமும், தேவகிருபையும், ஐக்கியமும் நிறைந்திருக்கவேண்டும்.

ஒநேசிமு
கொலோ 4:9

கொலோ 4:9. அவனையும், உங்களிலொருவனாயிருக்கிற உண்மையும் பிரியமுள்ள சகோதரனாகிய ஒநேசிமு என்பவனையும், உங்களிடத்தில் அனுப்பியிருக்கிறேன்; அவர்கள் இவ்விடத்துச் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பார்கள்.

ஒநேசிமு கொலோசெயரில் ஒருவராகயிருக்கிறார். அவர் உண்மையும் பிரியமுமுள்ள சகோதரர். அப்போஸ்தலர் பவுல் சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கையில் ஒநேசிமு அவர் பெற்ற மகன் போன்றிருந்தார். "கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற என் மகனாகிய ஒநேசிமுக்காக உம்மை மன்றாடுகிறேன்" (பிலே 10) என்று பவுல் இவரைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

ஒநேசிமு ரோமாபுரியில் இரட்சிக்கப்பட்டார். அங்கிருந்து ஒருவேளை இவர் தன்னுடைய எஜமானிடமிருந்து தப்பித்து ஓடிப்போயிருக்கவேண்டும். இவர் சாதாரண கூலி செய்கிற தரித்திரராகயிருந்தார். இவர் ஒரு அடிமை. சுபாவத்தின்படி இவர் துன்மார்க்கராகயிருந்தார். ஆனால் இப்போதோ தன் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்டிருக்கிறார். பவுல் இப்போது இவரை "உண்மையும் பிரியமுமுள்ள சகோதரன்" என்று குறிப்பிடுகிறார்.

இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக ஒருவருடைய ஜீவியம் மிகவும் துன்ப மார்க்கமாக இருந்திருக்கலாம். அவர் மிகவும் பயங்கரமான சூழ்நிலைகளில் வாழ்ந்திருக்கலாம். என்றாலும் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிக்கப்படும் போது, பழையவையெல்லாம் ஒழிந்து போகும். எல்லாம் புதிதாகும். ஆவிக்குரிய விசுவாசிகள் மத்தியில் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு புதிய ஐக்கியம் கிடைக்கும்.

ஒநேசிமுவின் பழைய ஜீவியம் மோசமாகயிருந்தாலும், இப்போது அப்போஸ்தலர் பவுலோடு புதிய ஐக்கியத்திலிருக்கிறார். இதுவரையிலும் ஒரு எஜமானுக்கு அடிமையாயிருந்தவர், இப்போது பவுலுக்கு ஆவிக்குரிய சகோதரராகயிருக்கிறார்.

அரிஸ்தர்க்கும், மாற்கும்
கொலோ 4:10

கொலோ 4:10. என்னோடேகூடக் காவலிருக்கிற அரிஸ்தர்க்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல் சொல்லுகிறான், இவனைக் குறித்துக் கட்டளைபெற்றீர்களே; இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கிகரித்துக்கொள்ளுங்கள்.

அரிஸ்தர்க்கு பவுலோடுகூட சிறைச்சாலையில் கட்டப்பட்டிருக்கிறார். ஊழியத்திலும், பாடுகளிலும் இணைந்திருக்கிறவர்கள் பரிசுத்த அன்பிலும் நிறைந்திருப்பார்கள். அரிஸ்தர்க்கு பவுலோடுகூட காவலிலிருந்தவர். இப்போது கொலோசெயருக்கு அவரும் வாழ்த்துதல் சொல்லுகிறார்.

மாற்கு பர்னபாவுக்கு இனத்தான். பர்னபாவுடைய சகோதரியின் குமாரன். இவர் மாற்கு எழுதின சுவிசேஷத்தின் ஆசிரியர். பவுல் மாற்குவைப்பற்றிச் சொல்லும்போது, "இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கீகரித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார். பவுலின் ஆரம்பகால ஊழியத்தில், மாற்குவின் நிமித்தமாக அவருக்கும் பர்னபாவுக்கும் கருத்து வேறுபாடு உண்டாயிற்று. வாக்குவாதமுண்டாயிற்று. ஆனாலும் இப்போதோ பவுல் மாற்குவோடும், பர்னபாவோடும் ஒப்புரவாகியிருக்கிறார். மாற்கு சபைகளுக்கு வந்தால் அவரை ஏற்றுக்கொள்ளுமாறு அவரைக்குறித்து நல்வார்த்தை சொல்லுகிறார்.

ஊழியத்தில் ஒருவர் நமக்கு விரோதமாக தவறு செய்திருக்கலாம். நமக்கு விரோதமாக அவதூறு பேசியிருக்கலாம். அதை எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கக்கூடாது. அதை மன்னித்து மறந்துவிடவேண்டும். ஒருவர் செய்த தப்பிதத்தை நாம் மறக்காமல் நினைவில் வைத்திருந்தால், அவரை நம்மால் மன்னிக்கவே முடியாது. நாம் பிறரை மன்னிக்கவில்லையென்றால், நம்முடைய ஊழியமும் ஆசீர்வாதமாயிருக்காது.

யுஸ்து
கொலோ 4:11

கொலோ 4:11. யுஸ்து என்னப்பட்ட இயேசுவும் வாழ்த்துதல் சொல்லுகிறான். விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என் உடன்வேலையாட்களாயிருந்து, எனக்கு ஆறுதல் செய்துவந்தவர்கள்.

இவருடைய மறுபெயர் இயேசு. எபிரெய பாஷையில் "யோசுவா" என்னும் பெயர், கிரேக்க பாஷையில் "இயேசு" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இவர் தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு பவுலின் உடன்வேலையாளாயிருக்கிறார். பவுலுக்கு ஆறுதல் செய்து வந்தார். அரிஸ்தர்க்கு பவுலோடுகூட காவலிலிருந்தவர். யுஸ்து தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு பவுலின் உடன்வேலையாள். இவர்களெல்லோருமே பவுலுக்கு உடன் ஊழியக்காரராயிருக்கிறார்கள்.

எப்பாப்பிரா
கொலோ 4 : 12,13

கொலோ 4:12. எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.

கொலோ 4:13. இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எரோப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாயிருக்கிறானென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்.

எப்பாப்பிரா கொலோசெயரைச் சேர்ந்தவர். கிறிஸ்துவின் ஊழியக்காரர். சிநேகிதர்களுக்காக கர்த்தரிடத்தில் எப்படி ஜெபிப்பது என்பதை இவர் பவுலிடமிருந்து கற்றுக்கொண்டவர். கொலோசெயர் தேவனுக்குச் சித்தமானவைகள் எல்லாவற்றிலும் தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்று, தன்னுடைய ஜெபங்களில் அவர்களுக்காக எப்பொழுதும் போராடுகிறார்.

கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தேவனுக்கு சித்தமானவைக ளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும், பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டும். இதுவே நம்முடைய வாஞ்சையாக இருக்கவேண்டும். பிறருக்காக ஜெபிக்கும்போது, இப்படிப்பட்ட வாஞ்சை அவர்களுக்குள்ளும் இருக்கவேண்டுமென்று ஜெபிக்கவேண்டும்.

எப்பாப்பிரா கொலேசெயருக்காக தன்னுடைய ஜெபங்களில் எப்பொழுதும் போராடுகிறார். அவர்களுக்காக மிகுந்த ஜாக்கிரதையுள்ளவராயிருக்கிறார். எப்பாப்பிராவின் ஜெபத்திற்கும் ஜாக்கிரதைக்கும் பவுல் சாட்சியாயிருக்கிறார். கொலோசெயருக்கு மாத்திரமல்ல லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும் எப்பாப்பிரா மிகுந்த ஜாக்கிரதையுள்ளவராயிருக்கிறார்.

லூக்காவும் தேமாவும்
கொலோ 4:14

கொலோ 4:14. பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

அப்போஸ்தலர் பவுல் கொலோசெயருக்கு வாழ்த்து சொல்லுகிறவர்களின் அட்டவணையில் லூக்காவையும், தேமாவையும் சேர்த்துக்கொள்கிறார். லூக்கா பவுலுக்குப் பிரியமான வைத்தியர். லூக்கா எழுதின சுவிசேஷத்திற்கும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புஸ்தகத்திற்கும் ஆசிரியர். பவுல் மிஷனெரிப்பிரயாணம் மேற்கொண்டபோது லூக்கா அவரோடுகூட பிரயாணம் செய்து, அவருக்கு ஊழியத்தில் உதவியாயிருந்தார்.

அப்போஸ்தலர் பவுல் தேமாவைப்பற்றி தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாவது நிருபத்தில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். "தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்திற்குப் போய் விட்டான்" (2தீமோ 4:10). இவர் ஒரு காலத்தில் பவுலுக்கு உடன் ஊழியராயிருந்தார். விசுவாசிகள் மத்தியில் நல்ல பெயர் எடுத்தவர். கொலோசெயருக்கு வாழ்த்து சொல்லுகிறவர்களின் பெயர் அட்டவணையில் பவுல் தேமாவின் பெயரையும் சொல்லுகிறார். ஆனால் இந்த தேமாவோ பின்பு பவுலைவிட்டுப் பிரிந்துபோய்விடுகிறார்.

தேமாவைப்போல ஒரு சிலர் ஊழியத்தில் உயர்ந்த நிலையிலிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சாத்தானுடைய வஞ்சக வலையில் விழுந்து, இப்பிரபஞ்சத்தின்மீது ஆசை வைத்து, கர்த்தருடைய ஊழியத்தை விட்டும், கர்த்தரைவிட்டும் விலகிப்போய் விடுகிறார்கள். ஆகையால் தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிற எவனும் விழுந்துவிடாதபடி மிகுந்த எச்சரிப்போடு இருக்கவேண்டும்.

லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரர்
கொலோ 4 : 15,16

கொலோ 4:15. லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள்.

கொலோ 4:16. இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு இது லவோதிக்கேயா சபையில் வாசிக்கப்படும்படி செய்யுங்கள்; லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள்.

லவோதிக்கேயா பட்டணம் கொலோசெ பட்டணத்திற்கு அருகாமையிலுள்ளது. அப்போஸ்தலர் பவுல் லவோதிக்கேயாவிலிருக்கிற விசுவாச சகோதரர்களுக்கும் வாழ்த்துதல் சொல்லுகிறார். பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்தை, அங்கு வாசித்தபின்பு, அதை லவோதிக்கேயா சபையிலும் வாசிக்கும்படி செய்யுங்களென்று அன்போடு கேட்டுக்கொள்கிறார்.

லவோதிக்கேயாவிலிருந்து வரும் நிருபத்தை கொலோசெயரும் வாசிக்குமாறு அவர்களுக்குப் புத்திசொல்லுகிறார். ஒருவேளை பவுல் இக்காலத்தில் கொலோசெயருக்கு வேறொரு நிருபம் எழுதியிருக்கவேண்டுமென்று வேத பண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இந்த நிருபம் நமக்குக் கிடைக்கவில்லை. இது ஒருவேளை காணாமல்போயிருக்கலாம்.

லவோதிக் கேயாவிலிருக்கிற சகோதரரைப்பற்றிச் சொல்லும்போது பவுல் நிம்பாவைப்பற்றியும் சொல்லுகிறார். அவருடைய வீட்டில் விசுவாசிகள் சபையாகக் கூடிவந்து கர்த்தரை ஆராதிக்கிறார்கள். அவருடைய வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துமாறு பவுல் கேட்டுக்கொள்கிறார்.

அர்க்கிப்பு
கொலோ 4:17

கொலோ 4:17. அர்க்கிப்பைக் கண்டு: நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாகவென்று சொல்லுங்கள்.

இவர் கர்த்தருடைய ஊழியக்காரர். கர்த்தரிடமிருந்து ஊழியத்தைப் பெற்றிருக்கிறார். தான் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருக்க வேண்டுமென்று பவுல் அர்க்கிப்புக்கு புத்திசொல்லுகிறார். நாம் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஊழியம் மிகவும் கனமுள்ள ஊழியம். ஊழியம் கர்த்தருடையது. கர்த்தரே நம்மை ஊழியத்திற்கு நியமித்திருக்கிறார். அவரே நம்மை பிரதிஷ்டை செய்திருக்கிறார். தேவனுடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமே நமக்கு ஊழியம் ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஊழியத்தை கவனமாய் நிறைவேற்ற வேண்டும். உண்மையோடும் பயபக்தியோடும் ஊழியம் செய்யவேண்டும்.

விசுவாசிகள்கூட ஊழியக்காரருக்கு, அவர்களுடைய ஊழியத்தைப்பற்றி ஆலோசனை சொல்லலாம். கர்த்தரிடத்தில் தாங்கள் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருக்க வேண்டுமென்று விசுவாசிகளும் ஊழியக்காரருக்கு புத்தி சொல்லலாம்.

பவுலாகிய நான்
கொலோ 4:18

கொலோ 4:18. பவுலாகிய நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன். நான் கட்டப் பட்டிருக்கிறதை நினைத்துக் கொள்ளுங்கள். கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

கொலோசெயருக்கு வாழ்த்து சொல்லுகிறவர்களுடைய அட்டவணையில் பவுல் தன்னுடைய பெயரை கடைசியாகக் குறிப்பிடுகிறார். தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தான் கட்டப்பட்டிருப்பதை நினைத்துக் கொள்ளுமாறு அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறார். இந்த வார்த்தைகளை பவுல் தன் கையினால் எழுதியிருக்கிறார். “கிருபை உங்களோடிருப்பதாக” என்று சொல்லி அவர்களை வாழ்த்துகிறார். தேவனுடைய கிருபையும், அவருடைய எல்லா நன்மைகளும் விசுவாசிகளிடத்தில் தங்கியிருக்கவேண்டும். கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற ஆசீர்வாதத்தின் பங்கை விசுவாசிகள் தடையில்லாமல் பெற்றுக்கொள்ளவேண்டும். ஆமென்.